**முக்கியம்!**

நீங்கள் செலான் Visa/Master அட்டையைப் பயன்படுத்துவதற்கு முன்னா் தயவுசெய்து அட்டை வைத்திருப்பவரின் இந்த உடன்படிக்கையை முழுமையாக வாசிக்கவும். (அட்டை) என்ற பதம் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளைப் பொருத்தவரையில் வங்கியினால் வழங்கப்பட்ட பின்வரும் ஏதேனும் ஒரு செலான் கடன் அட்டைகளில் ஒன்றை அல்லது அவற்றின் ஏதேனும் கூட்டிணைப்பைக் குறிக்கும்:

- செலான் Visa Gold/Platinum/Signature/ Corporate / Infinite
- செலான் Master Titanium/World

இந்த அட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவும் அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கவும் நீங்கள் இணங்குகின்றீர்கள்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், செலான் பேங்க் பீஎல்சீ (வங்கி) இனால் செலான் Visa/Master Cards (அட்டை) வழங்கப்படுகிறது.

## கடன் அட்டை வைத்திருப்பவரின் ஒப்பந்தம்

செலான் வங்கி கிரெடிட் கார்டு(கள்) வழங்குவதற்கு நான்/நாங்கள் இதன் மூலம் விண்ணப்பித்துள்ளதுடன், இந்த விண்ணப்பத்தில் மற்றும் இணைப்புகளில் (ஏதேனும் இருந்தால்) கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எல்லா வகையிலும் உண்மை மற்றும் சரியானவை என்று சான்றளிப்பதுடன், எனக்கு /எங்களுக்கு ஒரு கணக்கை திறக்குமாறும் கார்டு(களை) இரண்டு துண்டுகளாக வெட்டி, இரண்டு துண்டுகளையும் உங்களிடம் திருப்பித் தந்து கார்டு(களை) பயன்படுத்துவது தொடர்பில் என்னுடைய /எங்களுடைய உரிமையை ஒப்படைக்கும் வரை, கார்டு(களை) புதுப்பிக்குமாறும் மற்றும் பதிலீடு செய்யுமாறும் நான்/நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

எனக்கு /எங்களுக்கு அறிவித்தலின்றி என்னுடைய /எங்களுடைய வங்கியாளர்களிடம் இருந்து அல்லது பொருத்தமானது எனக் கருதும் வேறு எந்நவொரு வழியிலேனும் அல்லது எவ்வாரேனும் எந்தவொரு தகவலையும் அவ்வப்போது உறுதிப்படுத்திக்கொள்வதற்கு செலான் பேங்க் பீஎல்சீக்கு நான் /நாங்கள் இதன் மூலம் அதிகாரம் அளிக்கின்றேன் /அளிக்கின்றோம்.

செலான் வங்கி பிஎல்சி இனால் வழங்கப்பட்ட இந்த செலான் வங்கி அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மட்டுமே எனது/எங்கள் கிரெடிட் கார்டு/களை பயன்படுத்தப்படலாம் என்பதை நான்/நாங்கள் ஒப்புக்கொள்வதோடு, இந்த கிரெடிட் கார்டுடன் எனக்கு/எங்களுக்கு வழங்கப்பட்ட செலான் வங்கி அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தத்தை நான்/நாங்கள் முறையாகப் வாசித்து விளங்கிக் கொண்டோம் என்றும் அதனை முழுமையாக ஏற்று ஒழுக கடமைப்பட்டுள்ளோம் என்றும் மேலும் ஒப்புக்கொள்கிறேன் /ஒப்புக்கொள்கிறோம்.

வர்த்தக அளவுகளில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் இலங்கைக்கு வெளியே மூலதனத்தை மாற்றுவதற்கும் வெளிநாடுகளில் கடன் அட்டையை பயன்படுத்துவதில்லை என நான்/நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

அட்டை வைத்திருப்பவர் நாட்டிலிருந்து குடிபெயரும் பட்சத்தில் அல்லது வெளிநாட்டு வேலைக்காக இலங்கையை விட்டுச் செல்லும் பட்சத்தில் அட்டையை (அட்டைகளை) வங்கியிடம் மீள ஒப்படைக்கவும் அனைத்து நிலுவைகளையும் முழுமையாக செலுத்தவும் நான் /நாங்கள் உடன்படுகின்றேன் / றோம்.

என்னுடைய /எங்களுடைய (இதனகத்துப் பின்னர் ‘அட்டை வைத்திருப்பவர்’ என குறிப்பிடப்படும்) கோரிக்கையின் பேரில் அனைத்து கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான உறுதிமொழி மற்றும் பொறுப்பேற்பின் அடிப்படையில் வழங்கப்பட்ட முதன்மை அட்டையின் பாவனை மற்றும் மேலதிக அட்டையின் பாவனை என்பவற்றிற்கு நான் /நாங்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாவதற்கு நான் /நாங்கள் உடன்படுகிறேன் /றோம்.

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தில் அடங்கியுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அதன் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க திருத்தப்பட்ட இலங்கை வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் ஏற்பாடுகள் உள்ளடங்கலாக அத்தகைய சட்டத்தின் அடிப்படையில் கைவிடப்பட்ட சொத்து தொடர்பிலான வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டளைகள், 2006 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணச்சலவை தடுப்புச் சட்டம் இல. 5 (PMLA), 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனைகள் அறிக்கையிடல் சட்டம் (FTRA) ஆகியவை தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் வழிப்படுத்தல்கள் பற்றிய விதிகளை நான்/நாங்கள் அறிந்திருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறேன்/நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் செயற்பாடுகள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சட்டங்கள், கட்டளைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொடர்பாக தேவைப்படும் அத்தகைய விதிமுறைகளுக்கு வங்கி எல்லா நேரங்களிலும் இணங்கும் என்பதை நான் / நாங்கள் உறுதிப்படுத்தி, புரிந்துகொண்டு ஒப்புக்கொள்கிறோம். அட்டை வைத்திருப்பவர் எந்த நேரத்திலும் அட்டைக் கணக்கின்

நிலுவைத் தொகைக்கு மேலதிகமாக அத்தகைய தொகைகளை அட்டைக் கணக்கில் முன்கூட்டியே ஏற்றக்கூடாது.

இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கியின் செயற்பாடுகள் தொடர்பான அனைத்து சட்டங்கள், வழிப்படுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் மற்றும் மேற்கூறியவை தொடர்பாக தேவைப்படும் விதிமுறைகளுக்கு வங்கி எல்லா நேரங்களிலும் இணங்கும் என்பதை அட்டை வைத்திருப்பவர் உறுதிப்படுத்துகிறார், புரிந்துகொள்கிறார் மற்றும் ஒப்புக்கொள்கிறார்.

செலான் வங்கி பிஎல்சிக்கு (இதனகத்துப் பின்னர் 'வங்கி' என்று குறிப்பிடப்படும்) இந்த விண்ணப்பத்தை எந்த காரணமும் கூறாமல் ஏற்கவும் அல்லது நிராகரிக்கவும் அதற்கு முழுமையான தற்றுணிபு உள்ளது என்பதை நான்/நாங்கள் ஏற்றுக்கொள்வதுடன், இங்கே கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மாற்றமுடியாத வகையில் இணங்கி, உறுதியளிக்கிறேன் /றோம்.

**வரைவிலக்கணங்கள்**

இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பதங்கள், சந்தர்ப்பத்தினால் வேறு விதமாக தேவைப்படுத்தப்படாவிடின், பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும். "ஒப்பந்தம்" என்பது இனிமேல் குறிப்பிடப்படவிருக்கும் விதிகள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைய காலத்திற்குக் காலம் மாற்றம் செய்யப்படக்கூடிய விதிகள், இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக சேவைகளின் வழங்கல்கள் தொடர்பில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

**பொருள்கோடல்**

சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி அல்லது வேறு வகையில் திட்டவட்டமாக குறித்துரைத்தாலன்றி:

(ய) தலைப்புகள் வசதிக்காக மட்டுமே உட்புகுத்தப்படுகின்றன. அவை இந்த அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கையின் பொருள்கோடலைப் பாதிக்க மாட்டா.

(டி) "உட்பட" என்பதும் இதனையொத்த சொற்களும் ஏதேனும் வரையறுத்தலை உணர்த்த மாட்டா.

(உ) "அட்டைவைத்திருப்பவர்கள்" என்னும் சொற்பதம் எவரேனும் மேலதிக அட்டை வைத்திருப்பவர் என்றும் பொருள்படுவதுடன் அவரையும் உள்ளடக்கும்.

(ன) “அட்டை” என்பது செலான் பேங்க் பீஎல்ஸியினால் வழங்கப்பட்ட ஏதேனும் வகை அட்டை /அட்டைகள் (செலான் Platinum Visa/ Freedom MasterCard/ Gold Visa/செலான் Classic Visa அட்டை) எனவும் பொருள்படுவதுடன் அதனையும் உள்ளடக்குவதுடன் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் மேலதிக துணை அட்டை /அட்டைகளையும் உள்ளடக்கும்.

(ந) ஒரு நபருக்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்கள் ஒரு தரப்பினராயின், அந்த ஒவ்வொரு நபரினதும் பொறுப்பு கூட்டாகவும் தனித்தனியாகவும் அமையும்.

(க) ஒருமையை மாத்திரம் உணர்த்தும் சொற்கள் பன்மையையும் குறிக்கும், பன்மையை மாத்திரம் குறிக்கும் சொற்கள் ஒருமையையும் உள்ளடக்கும். ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலையும் பெண்பாலைக் குறிக்கும் சொற்கள் ஆண்பாலையும் உள்ளடக்கும்.

(ப) இந்த வரைவிலக்கணத்துடன் தொடர்புடைய ஏதேனும் சொல் அல்லது சொற்பதம் வரைவிலக்கணத்தை நேரொத்த பொருளொன்றைக் கொண்டிருக்கும்.

(ா) வாசகங்களை அல்லது வேறு இனம்காட்டிகளைப் பற்றிய குறிப்பீடுகள் இந்த உடன்படிக்கையிலுள்ள குறிப்பீடுகளாகும். அட்டை செயற்படுத்தப்படும் நேரத்தில் அட்டை வைத்திருப்பவர் அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள அல்லது அடங்கியுள்ள எல்லா நியதி நிபந்தனைகளுக்கும் இத்தால் உடன்படுகின்றார் எனக் கருதப்படுகின்றது என்பது இரு தரப்பினாலும் இரு தரப்புகளுக்கும் இடையிலும் இத்தால் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

(ை) “பணம்” என்பதன் மூலம் நாடப்படுவது இலங்கை அரசாங்கம் அல்லது வெளிநாட்டு அரசொன்றினால் வெளியிடப்பட்ட, நிறுவப்பட்ட, அங்கீகாரமளிக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட பண அலகை அல்லது பரிமாற்ற ஊடகத்தை குறிக்கும்.

(த) “பணப் பெறுமதி” என்பதன் மூலம் நாடப்படுவது, களஞ்சியப்படுத்தப்பட்ட பெறுமதி, கொடுப்பனவு தொடர்பான சட்ட ஆவணங்கள் அல்லது கணக்கிற்கு வரவு வைத்தல் ஆகிய ஏதேனும் ஒரு முறையையும் உள்ளடக்கியதாக, மீட்கக் கூடிய அல்லது மீட்க முடியாத ஒரு ஊடகத்தை குறிப்பதுடன், இதில் கோல்ட் கொயின் மற்றும் தங்கக் கட்டிகளையும் உள்ளடக்கும்.

(ம) “மாறும் நாணயப்பரிமாற்றம்” என்பதன் மூலம் நாடப்படுவது, பொருள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்யும் விலை, கொள்வனவு செய்யும் விலை காட்சிப்படுத்தப்பட்ட பண வகையில் இருந்து அட்டை வைத்திருப்பவரின் பட்டியலிடல் பண வகைக்கு மாற்றுவதாகும். இதன்போது வியாபாரியின் உள்நாட்டுப் பணம் எதுவாயினும், அந்தப் பணம் கொடுக்கல் வாங்கல் பண வகையாக மாறும்.

(ட) “பல்வகை பணப் பரிமாற்றம்’ என்பதன் மூலம் நாடப்படுவது, தேசிய ரீதியாக இலங்கை ரூபாவில் வியாபார நிறுவனங்களில் இணையத்தளங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் ஆயினும், வியாபாரியின் பெறுகை வங்கி உள்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வங்கியல்ல. இதன்போது, வங்கியிலிருந்து வங்கிக்கான தீர்வு வெளிநாட்டு நாணயத்தில் உள்ளது.

(அ) “கிட்டிய குடும்ப உறுப்பினர்” என்பதன் மூலம் நாடப்படுவது, பிரதான அட்டை வைத்திருப்பவரின் வாழ்க்கைத் துணை, பெற்றோர், திருமணம் முடித்த அல்லது திருமணம் முடிக்காத பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள் ஆவர்.

(ெ) “BFCA” (Business Foreign Currency Account) என்பதன் மூலம் நாடப்படுவது, வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக கணக்கு.

(ழ) “PFCA” (Personal Foreign Currency Account) என்பதன் மூலம் நாடப்படுவது, வெளிநாட்டு நாணயத்திலான தனிப்பட்ட கணக்கு.

ߋ) “DFCA” (Diplomatic Foreign Currency Account) என்பதன் மூலம் நாடப்படுவது, வெளிநாட்டு நாணயத்திலான இராஜதந்திர கணக்கு.

(ங) “DRA” (Diplomatic Rupee Account) என்பதன் மூலம் நாடப்படுவது, இராஜதந்திர ரூபா கணக்கு.

(ச) “IIA” (Inward Investment Account) என்பதன் மூலம் நாடப்படுவது, உள்வரு முதலீட்டுக் கணக்கு.

(ள) “ERIA” (Emigrant Remittance Income Account) என்பதன் மூலம் நாடப்படுவது, புலம்பெயர் பண அனுப்பீடு வருமானக் கணக்கு.

**1. அட்டை**

1.1 அட்டை வங்கியின் சொத்தாகும் என்பதோடு, வங்கியின் கோரிக்கையின் பேரில் அட்டையை வைத்திருப்பவரினால் உடனடியாக வங்கியிடம் திருப்பி அளிக்கப்பட வேண்டும்.

1.2 வங்கியானது தனது முழுமையான தற்றுணிபின் பேரில் மற்றும் முன் அறிவிப்பு மற்றும் காரணமின்றி எந்த நேரத்திலும் அட்டையை மற்றும் அட்டையைப் பயன்படுத்துவதற்கான வைத்திருப்பவரின் உரிமையை திரும்பப் பெறலாம் மற்றும் எந்தவொரு அட்டை பரிவர்த்தனைக்கும் அங்கீகாரம் வழங்குவதற்கான எந்தவொரு கோரிக்கையையும் மறுக்கலாம்.

**2. அட்டை விநியோகமும் பாவனையும்**

2.1 அட்டை வைத்திருப்பவர் அட்டை கிடைக்கப்பெற்ற உடனேயே அதன் மறுபுறத்தில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், எல்லா நேரங்களிலும் அட்டையைப் பாதுகாத்து அதனைத் தனது தனிப்பட்ட கட்டுப்பாட்டில் வைத்திருத்தலும் வேண்டும்.

2.2 தனிப்பட்ட அடையாள இலக்கம் (“PIN”) வழமையான அஞ்சல் ஊடாக அட்டை வைத்திருப்பவருக்கு விநியோகிக்கப்படும். அது அஞ்சலில் அனுப்பப்பட்ட எழுப்பத்து இரண்டு மணித்தியாலங்களுள் அட்டை வைத்திருப்பவருக்கு PIN இலக்கம் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அதனை அவர் எற்றுக்கொண்டுள்ளதாகவும் கருதப்படும். PIN கிடைக்கப்பெற்றவுடன் அட்டை வைத்திருப்பவர் அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு அனைத்து முற்பாதுகாப்பு நடவடிக்கைளையும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் PIN பாதுகாக்கப்படுவதையும் ஏதேனும் விதத்தில் அல்லது முறையில் விட்டுக்கொடுக்கப்படாதிருப்பதையும் அவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2.3 அனைத்து அட்டைகளும் அட்டை வைத்திருப்பவருக்கும் மேலதிக அட்டை வைத்திருப்பவருக்கும்(வைத்திருப்பவர்களுக்கும்) ஒப்படைப்புச் சேவையினர் (கூரியர்) ஊடாக அனுப்பப்படும். அட்டை /அட்டைகள் கிடைக்கப்பெற்றதும் அட்டை வைத்திருப்பவரும் மேலதிக அட்டை வைத்திருப்பவரும் உடனடியாக அட்டை கிடைக்கப்பெற்றமையை ஒப்புறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் தமது ஆளடையாளத்தை முன்வைத்தலும் வேண்டும். அட்டை வைத்திருப்பவர் தனது தற்றுணிபின்பேரில் தனது சார்பில் அட்டையைப்/ களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கலாம். அத்துடன், அட்டை வைத்திருப்பவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அட்டை ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து அட்டையின் மீதான சகல அறவீடுகளுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாதல் வேண்டும். வங்கி அதன் தற்றுணிபின்படி வங்கியின்/அதன் பிரதிநிதியின் அபிப்பிராயப்படி அட்டை வைத்திருப்பவரின் பிரதிநிதியாகத் தென்படும் மூன்றாம் தரப்பினர் ஒருவரிடம் அட்டையை ஒப்படைக்கலாம் அல்லது கையளிக்கலாம்.

2.4 முகவரி மாற்றத்திற்கு அட்டை வைத்திருப்பவரால் எழுத்தில் செய்யப்படும் வேண்டுகோள் ஒன்றின் பேரில், வங்கியானது புதிய முகவரியை அட்டையை ஒப்படைக்கும் முகவரியாகவும் கணக்குக் கூற்று, PIN இலக்கம் மற்றும் /அல்லது அட்டையை ஒப்படைக்கும் சேவை தொடர்பில் வேறு ஏதேனும் கடிதத் தொடர்புகளுக்கான முகவரியாகவும் பயன்படுத்தும்.

2.5 அட்டையையும் PIN இலக்கத்தையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவா் பொறுப்பாளியாதல் வேண்டும். அட்டை வைத்திருப்பவா் மோசடியாக அல்லது அலட்சியமாகச் செயற்பட்டிருந்தால் அல்லது அட்டையைப் பாதுகாத்தல் தொடா்பில் கவனயீனமாக செயற்பட்டிருந்தால் அல்லது அட்டை அல்லது PIN காணாமற்போனமை, களவுபோனமை அல்லது வெளிவிடப்பட்டமை பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படாவிடில் அட்டை கணக்கில் பற்று வைக்கப்பட்ட எல்லா தொகைகளுக்கும் வரையறையின்றி அட்டை வைத்திருப்பவரே முற்றிலும் பொறுப்பாளியாதல் வேண்டும். காலத்திற்குக் காலம் ஏதேனும் தொடா்பாடல் மூலம் வங்கியால் விதப்புரை செய்யப்பட்டவாறு அட்டையை அல்லது PIN இலக்கத்தைப் பாதுகாப்பற்கான மற்றும் /அல்லது பேணுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்ற தவறியமை மேற்படி நோக்கத்திற்கு பாரதூரமான கவனயீனமாகக் கருதப்படும்.

2.6 அட்டை தொடா்பாக வங்கி கணக்கொன்றைப் பேணும். (இது இதனகத்துப் பின்னா் சில வேளைகளில் “அட்டைக் கணக்கு” எனக் குறிப்பீடு செய்யப்படும்). பொருள்களினதும் சேவைகளினதும் அனைத்துக் கொள்வனவுகளும் அட்டையினால் பயனுறுத்தப்பட்ட ரொக்க முற்பணங்களும் (“அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள்”) அனைத்து இழப்புகளும் அறவீடுகளும் இக் கணக்கில் பற்று வைக்கப்படும். வேண்டுகோள் விடுக்கப்பட்டாலும் அல்லாவிட்டாலும் கொள்வனவு அல்லது ரொக்க முற்பண உறுதிச்சீட்டுக்களில் அட்டை வைத்திருப்பவா் கையொப்பமிடத் தவறினால் அது தொடா்பில் வங்கிக்கான பொறுப்பிலிருந்து அட்டை வைத்திருப்பவா் விடுவிக்கப்பட மாட்டாா்.

2.7 ATM கொடுக்கல் வாங்கல் தொடரபில் அட்டை வைத்திருப்பவா் அத்தகைய கொடுக்கல் வாங்கலுக்கு அதிகாரமளித்துள்ளாா் என்பதற்கு வங்கியின் கனிணி முறைமையில் மற்றும் / அல்லது பதிவில் உள்ள தகவல் தீா்க்கமான சான்றாகும்.

2.8 ஒரு கொடுக்கல்வாங்கலின் போது PIN இலக்கம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதை இயலச் செய்யும் பட்சத்தில் (உ-ம் டெல்லர் பொறி/தொலைபேசி வங்கிச் சேவை/இணையத்தள வங்கிச் சேவையை பயன்படுத்தும் கொடுக்கல் வாங்கலின் போது PIN இலக்கத்தை இயலச்செய்து) அட்டை வைத்திருப்பவா் அத்தகைய கொடுக்கல் வாங்கலுக்கு அதிகாரமளித்துள்ளாா் என்பதற்கு வங்கியின் கனிணி முறைமையிலுள்ள தகவல் மற்றும் /அல்லது அறிக்கை தீா்க்கமான சான்றாகும் என்பதனை அட்டை வைத்திருப்பவா் இத்தால் விளங்கிக்கொள்கின்றாா் என்பதுடன் அதற்கு உடன்பட்டும்கொள்கின்றாா்.

2.9 அட்டை வைத்திருப்பவர் அல்லது மூன்றாம் தரப்பினர் ஒருவருடன் கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டார் என்று நம்புவதற்கு வங்கிக்கு ஏதுக்கள் இருக்குமிடத்து பிணக்கிற்குட்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கலின் பெறுமதியை அறவிடுவதற்கான உரிமை வங்கிக்கு உண்டு.

2.10 அத்தகைய திகதியில் அட்டை கணக்கு தவணைக் கடந்ததாக அல்லது சந்தேகத்திற்குரிய வகையில் ஏதேனும் பரிவர்த்தனை(கள்) கண்டறியப்பட்டால், ஏதேனும் அல்லது அனைத்து அட்டை பரிவர்த்தனைகளையும் நிராகரிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

2.11 இந்த அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டாலும் மற்றும் /அல்லது அட்டையை திருப்பி ஒப்படைத்தாலும் அட்டை தொடர்பில் வங்கியால் வழங்கப்பட்ட எல்லாக் கடன் வசதிகளுக்கும் அதன்கீழ் தொடர்புடைய எல்லா அறவீடுகளுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்புடையவராதல் வேண்டும்.

2.12 வங்கியானது அட்டைக் கணக்கிற்கு கடன் உச்சவரம்பொன்றைக் குறித்தொதுக்கும். அட்டை வைத்திருப்பவர் இதனை கண்டிப்பாக அனுசரிப்பதோடு, இக் கடன் உச்சவரம்புக்கு உட்பட்டதாகவே அட்டையைப் பயன்படுத்த வேண்டும். வங்கியானது காலத்திற்குக் காலம் அட்டை வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு இக் கடன் உச்சவரம்பை அதிகரிக்க அல்லது தரத்தை அதிகரிக்க (அல்லது குறைக்க) அல்லது கடன் உச்ச வரம்பை மீறி கொடுக்கல்வாங்கல் செய்வதற்கு அனுமதிக்க வங்கியினால் அதன் தற்றுணிபின் பேரில் முடியும். இந்த அறிவித்தல் கிடைத்த 7 நாட்களுக்குள், அட்டை வைத்திருப்பவர் அது குறித்து ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கப்படாவிட்டால், அட்டையின் பேரிலான கடன் உச்சவரம்பின் அதிகரிப்புக்கு அட்டை வைத்திருப்பவர் இணங்கியுள்ளார் என்றும் மற்றும் அல்லது புதிய கடன் வரம்புடனான புதிய அட்டைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கருத வங்கிக்கு உரிமையுண்டு என்பதை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார். அத்துடன், இந்த அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, இது தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்புடையவராதல் வேண்டும். அட்டை வைத்திருப்பவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடன் உச்சவரம்பை மீளாய்வு செய்யும்படி எந்த நேரத்திலும் விண்ணப்பிக்கலாம்.

2.13 ஏதேனும் சட்டவிரோத நோக்கத்திற்கு அட்டை பயன்படுத்தப்படுதலாகாது.

**3. விலைப்பட்டியலிடுதல் மற்றும் கொடுப்பனவுகள்**

3.1 கணக்குக் கூற்றுக் காலப்பகுதியின் கடைசி தினமாகிய கணக்குக் கூற்று பிறப்பிக்கப்பட்ட திகதியன்று அட்டைக் கணக்கில் (நிலுவையிலுள்ள மொத்தத் தொகை முடிவடையும் மீதி) மற்றும் நடைமுறை கணக்குக் கூற்றுக் காலப்பகுதி தொடர்பில் கணக்குக் கூற்று பிறப்பிக்கப்பட்ட திகதியன்றுள்ளவாறு அட்டை வைத்திருப்பவரிடமிருந்து வருமதியானதும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வருமதியான திகதியன்று (கொடுப்பனவு வருமதியான திகதி) வங்கிக்கு (செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சக் கொடுப்பனவு) என்பன பற்றிய விவரங்களுடன் விலைப்பட்டியலிடும் கணக்குக் கூற்றுக் காலப்பகுதியான ஒவ்வொரு காலப்பகுதியின் முடிவிலும் வழமையாக அட்டை வைத்திருப்பவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

3.2 வருமதியான மட்டுமீறிய உச்சவரம்புத் தொகை முந்திய கணக்குக்கூற்றுக் காலப் பகுதியிலிருந்து (''கடந்தகால வருமதியான தொகை'') வருமதியாயிருக்கும் செலுத்தப்படாத ஏதேனும் குறைந்தபட்ச கொடுப்பனவுடன் சேர்த்து உடனடியாக செலுத்தப்படுதல் வேண்டும். உடனடியாக செலுத்தப்படற்பாலதான இந்த இரண்டு தொகைகளும் ''கடந்தகால வருமதியும் இப்பொழுது வருமதியான மட்டுமீறிய உச்சவரம்புத் தொகையும்'' என்பதில் பிரதிபலிக்கப்படும். வங்கிக்கு செலுத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு வங்கியால் அறிவிக்கப்பட்ட முகவரியில் கிடைக்கப்பெற்று அட்டைக் கணக்கில் வரவுவைக்கப்பட்டதும் பயனுறுதல் வேண்டும். ஒரு வேலை நாளில் பி.ப 3.00 மணிக்கு பின்னர், காசாக செலுத்தப்பட்ட கொடுப்பனவொன்றை முறைவழிப்படுத்துவதற்கு குறைந்தபட்சம் ஒரு வேலை நாள் தேவைப்படும். அதே வேளை காசோலைகள் பணமாகத் தேறுவதன் பேரிலேயே அட்டைக் கணக்கில் வரவுவைக்கப்படும். அட்டை வைத்திருப்பவரின் வேண்டுகோளின் பேரில் அல்லது வங்கியின் தனித் தற்றுணிபின் பேரில் கணக்குக் கூற்றுக் காலப்பகுதிகள் மாற்றப்படலாம்.

3.3 செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்ச ஒப்பந்தக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய அந்தந்த திகதிகளில் செலுத்தப்படாமையின் விளைவாக அட்டையின் பயன்பாடு நிராகரிக்கப்படலாம்.

3.4 அட்டை வைத்திருப்பவரால் அட்டைக் கணக்கிற்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் அட்டை வைத்திருப்பவரின் பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வங்கி தீர்மானிக்கின்ற ஒழுங்கு வரிசையில் பிரயோகிக்கப்படும்.

3.5 செலுத்தப்படவேண்டிய மொத்த நிலுவைத் தொகை, கணக்குக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முழுமையாக செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உரிய திகதியில் வங்கியின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய இறுதி நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் அட்டை கணக்கிற்கு வரவு வைப்பதற்காக வங்கியின் அட்டை நிலையத்திற்கு கொடுப்பனவு கிடைக்கப் பெறும் பட்சத்தில் அட்டை வைத்திருப்பவருக்கு எவ்வித நிதிக் கட்டணங்களும் செலுத்த வேண்டி ஏற்படாது.

3.6 செலுத்தப்பட வேண்டிய முழு நிலுவைத் தொகையையும் முழுமையாக செலுத்தாதிருப்பதற்கு அட்டை வைத்திருப்பவர் எண்ணும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு செய்ய வேண்டிய இறுதி நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் அட்டை வைத்திருப்பவர் செலுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த தொகையை செலுத்த வேண்டும். செலுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த தொகையில் கடந்த பட்டியல் காலப் பகுதியில் (காலப்பகுதிகளில்) செலுத்தப்படாதுள்ள ஏதேனும் ஆகக்குறைந்த கொடுப்பனவுகளும் உள்ளடங்கும்.

வங்கிக்கு செலுத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு வங்கியால் அறிவிக்கப்பட்ட முகவரியில் கிடைக்கப்பெற்று அட்டைக் கணக்கில் வரவுவைக்கப்பட்டதும் பயனுறுதல் வேண்டும்.

3.7 அட்டை வைத்திருப்பவரால் அட்டைக் கணக்கின் பேரில் வங்கிக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் இந்த சட்டதிட்டங்களின் கீழ் அட்டை வைத்திருப்பவரின் பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வங்கி தீர்மானிக்கின்ற ஒழுங்கு வரிசையில் பிரயோகிக்கப்படும்.

3.8 அட்டை வைத்திருப்பவரினால் வங்கிக்கு செய்யப்படும் எந்தவொரு கொடுப்பனவும் குறித்த அட்டை கணக்கிற்கு வைக்கப்படுவது குறித்த அட்டைக் கணக்கிற்கு வங்கியினால் நிதி குறித்த பதிவை இடும் தினத்தில் மட்டுமேயாகும். ஒரு வேலை நாளில் பி.ப 3.00 மணிக்கு பின்னர், காசாக செலுத்தப்பட்ட கொடுப்பனவொன்றை முறைவழிப்படுத்துவதற்கு குறைந்தபட்சம் ஒரு வேலை நாள் தேவைப்படும். அதே வேளை காசோலைகள் பணமாகத் தேறுவதன் பேரிலேயே அட்டைக் கணக்கில் வரவுவைக்கப்படும்.

3.9 கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியன்று அட்டை வைத்திருப்பவரின் அட்டைக் கணக்குக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய மீதி முழுவதையும் அல்லது குறைந்தபட்ச தொகையின் கொடுப்பனவுகளை செய்வதற்கு, வங்கியிலுள்ள அட்டை வைத்திருப்பவரின் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கில் ('தீர்ப்பனவுக் கணக்கு') பற்று வைக்கும்படி அட்டை வைத்திருப்பவர் நேரடியான நிலையியல் அறிவுறுத்துதல் ஒன்றை வழங்கலாம்.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டு வங்கியினால் செயற்படுத்தப்படும் அத்தகைய நிலையியல் அறிவுறுத்துதல்களுக்கான எவையேனும் திருத்தங்களும் இல்லாதொழித்தல்களும் (உ-ம் தன்னியக்க பட்டியல் தீர்ப்பனவுகள்) அதற்கு அடுத்த கொடுப்பனவு வருமதியான திகதிக்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னராவது வங்கியின் அட்டை நிலையத்தை வந்துசேருதல் வேண்டும்.

3.10 வங்கியுடனான தீர்வுக் கணக்கிற்கு வழங்கப்பட்ட நேரடி பற்று நிலையியல் அறிவுறுத்தல் ஒன்றுக்கு பின்வரும் மேலதிக நியதி நிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

a. முன்வைக்கப்பட்டவைகளுக்கு எதிராக அல்லது வங்கியுடன் செய்யப்பட்ட வேறு ஏற்பாடுகளுக்கு எதிராக அத்தகைய ஏதேனும் நிலையியல் அறிவுறுத்துதலின் முன்னுரிமையைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு என்பதற்கு அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

b. கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதிக்குக் குறைந்தபட்சம் ஒரு நாளுக்கு முன்னராவது நிலையியல் அறிவுறுத்துதலை நிறைவேற்றுவதற்கு தீர்வுக் கணக்கில் போதியளவு நிதிகள் வழங்கப்படுவதற்கு அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார். தீர்வுக் கணக்கில் போதியளவு மீதி இல்லாதபட்சத்தில் வங்கி அதன் தற்றுணிபின்படி நிலையியல் அறிவுறுத்தலுக்கு அமைவாகக் கொடுப்பனவுத் தொகையை ஈடுசெய்வதற்கு காலத்துக்குக் காலம் மேலதிகப் பற்றுக்களை வழங்கலாம். கோரிக்கையின் பேரில் மூடப்படும் நேரத்திலான மீதி முழுவதையும் கோரிக்கையின் பேரில் காலத்துக்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படும் வீதமொன்றின்படி அதன்மீது திரளும் நிதி அறவீட்டுடன் சேர்த்து மீளச் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் பிணிக்கப்படுகின்றார்.

c. கொடுப்பனவு வருமதியான திகதியொன்றில் தீர்வுக் கணக்கில் போதியளவு மீதி இல்லாத பட்சத்தில் அதன் பின்னர் மேற்படி தீர்வுக் கணக்கிலுள்ள நிதிகளின் அடிப்படையில் அறவீட்டின் முந்துரிமையைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கு இருத்தல் வேண்டும். நிதி அறவீடு உட்பட அதன்மீது ஏற்பட்ட எல்லா அறவீடுகளையும் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் பொறுப்புடையவராவார். அறிவுறுத்தப்பட்ட மொத்தத் தொகையை அறவிடுவதற்குப் போதிய நிதிகள் இல்லாதபட்சத்தில் வருமதியான குறைந்தபட்ச தொகையை நியமிக்கப்பட்ட தீர்வுக் கணக்கிலிருந்து அறவிடுவதற்கான உரிமையை வங்கி கொண்டிருத்தல் வேண்டும்.

3.11 இலங்கை ரூபா தவிர்ந்த வேறு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் அட்டை கொடுக்கல்வாங்கல்கள் அட்டை கணக்கிற்கு வரவு வைக்கப்படுவது, பரிமாற்றம் செய்யப்பட்ட திகதியில், வங்கியினால் தீர்மானிக்கப்படும் அப்போதைய விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவில் மாற்றியதன் பின்னரேயாகும்.

3.12 கொடுக்கல் வாங்கலொன்றை இரத்துச் செய்தல், திருப்பியளித்தல், மீளப்பெறல் காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு பரமாற்ற இழப்பு தொடர்பிலும் அட்டை உரிமையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

3.13 இந்த ஒப்பந்தத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்குப் முரணாகாதபடி, அட்டை வைத்திருப்பவர் ஒரு மாதத்திற்குமேல் இலங்கையில் இல்லாதிருப்பின் அந்த அட்டை வைத்திருப்பவர் அட்டை கணக்கு தொடர்பல் வங்கிக்கு தெளிவான மற்றும் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்துதல்களை விட்டுச்செல்ல வேண்டும் என்பதுடன் அவர் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் அத்தகைய அறிவுறுத்துதல்கள் வங்கியின் அட்டை நிலையத்திற்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

3.14 அட்டை கணக்கு தொடர்பில் மாதாந்தம் வெளியிடப்படும் கூற்று அட்டை வைத்திருப்பவரினால் முழுமையாக பரீட்சிக்கப்பட வேண்டும் என்பதோடு, அதில் ஏதேனும் பிழைகள் இருப்பின் அது பற்றி வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் வங்கியின் அட்டை மத்திய நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும். அந்த காலப்பகுதிக்கு பின்னர் வெளியீடு மற்றும் அதன் உள்ளடக்கம் (அறிவிக்கப்பட்ட எதேனும் தவறுகள் தவிர) வங்கியும் அட்டை வைத்திருப்பவரும் சரியானவை என கருதுவதாக கொள்ளப்படும். அட்டை வைத்திருப்பவரினால் எழுத்து மூலம் வங்கிக்கு வழங்கியுள்ள அண்மைய முகவரிக்கு அனைத்து அச்சிடப்பட்ட

கூற்றுக்களும் சாதாரண தபாலில் அனுப்பப்படுவதுடன், 48 மணித்தியாலங்களுக்குள் அது அட்டை வைத்திருப்பவருக்கு கிடைத்துவிட்டதாக கருதப்படும்.

a. ஒப்பந்தத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு முரணாகாதபடி, அட்டை வைத்திருப்பவர் புலம்பெயர்தல் அல்லது வேறு கடமை நோக்கத்தில் ஒரு மாதத்திற்குமேல் இலங்கையில் இல்லாதிருப்பின் அந்த அட்டை வைத்திருப்பவர் தனது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றின் (PFCA) ஊடாக அட்டைக் கணக்கைத் தீர்ப்பதற்கு வங்கிக்கு தெளிவான மற்றும் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்துதல்களை விட்டுச்செல்ல வேண்டும் என்பதுடன் அவர் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் அத்தகைய அறிவுறுத்துதல்கள் வங்கிக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.
b. கணக்கு விபரக்கூற்றொன்று கிடைக்கப்பெறாமை கொடுப்பனவு செய்யப்படாமைக்கு செல்லுபடியான காரணமாகக் கருதப்பட மாட்டாது. (கணக்கு விபரக்கூற்று பிறப்பிக்கப்பட்ட பதினான்கு (14) நாட்களுக்குள் அல்லது புதிய அட்டையொன்றின் விடயத்தில் அட்டை அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அந்த விபரக்கூற்று கிடைக்காவிடின், அட்டை வைத்திருப்பவர் அது பற்றி வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.)

## 4. கட்டணங்களும் அறவீடுகளும்

(அட்டையின் வகையைப் பொறுத்து, குறித்த சில அறவீடுகளுக்கு விலக்களிப்பு வழங்கப்படலாம். தயவுசெய்து ஏற்புடைய திட்டத்தின் விபரங்களைப் பார்க்கவும்)

4.1 புதிய அட்டை தொடர்பில் இணைப்பு மற்றும் வருடாந்த கட்டணத்தைச் செலுத்த அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார். கட்டணம் செலுத்தவேண்டியிருக்கும் போது, வங்கியின் நடைமுறையிலுள்ள விதிப்பனவுகள் பட்டியலுக்கேற்ப அட்டை கணக்கிற்கு கட்டணங்கள் வரவு வைக்கப்படும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டணங்களை மாற்றுவதற்கு வங்கிக்கு உரிமையுள்ளது.

4.2 அட்டை வெளிநாட்டு முகவரியொன்றுக்கு கூரியர் மூலம் அனுப்பப்படும் போது, வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான ஒரு வீதத்தில் ஒரு கையாளுகைக் கட்டணம் அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.3 தற்காலிக மற்றும் /அல்லது நிரந்தர வரம்பை அதிகரிப்பதற்காக, வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான ஒரு வீதத்தில் ஒரு கையாளுகைக் கட்டணம் அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.4 அட்டைக் கூற்றின் பிரதிகளை வழங்குவதற்காக வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான ஒரு வீதத்தில் ஒரு கையாளுகைக் கட்டணம் அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.5 அட்டை வைத்திருப்பவா் முடிவுநேர மொத்த மீதியை கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியன்று செலுத்தித் தீர்க்காவிடில், கணக்கு விபரக்கூற்றுத் திகதியன்றுள்ள முடிவுநேர மொத்த மீதிக்கு நிதி அறவீடு ஒன்று விதிக்கப்படும். வங்கியால் தீா்மானிக்கப்படவுள்ள வீதத்தில் கொடுக்கல் வாங்கல் திகதியிலிருந்து பட்டியற்படுத்தல் காலத்தில் நாளாந்த மீதியின் அடிப்படையில் இந்த நிதி அறவீடு கணிக்கப்படும். அந்த நிதி அறவீடு அடுத்துவரும் கணக்கு விபரக்கூற்றுத் திகதியன்று அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.6 மேலே 4.5 இல் குறிப்பிடப்பட்ட நிதிக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கு முரணாகாதவாறு, அட்டை வைத்திருப்பவர் கொடுப்பனவு இறுதித் திகதியன்று நிலுவையாகவுள்ள ஆகக் குறைந்த தொகையை செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில், வங்கியால் தீா்மானிக்கப்படவுள்ள வீதத்தில் ஒரு தாமதக் கட்டணம் விதிக்கப்பட்டு அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.7 அட்டை வைத்திருப்பவர் அல்லது வேறு எவரேனும் ஒரு தரப்பினால் வங்கிக்கு வழங்கப்படும் அல்லது சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் ஒரு காசோலை அல்லது வேறு கொடுப்பனவுக் கட்டளை எந்த ஒரு காரணத்தினாலும் மதிப்பளிக்கப்படாதவிடத்து வங்கியால் தீர்மானிக்கப்படவுள்ள வீதத்தில் ஒரு கையாளுகைக் கட்டணம் அட்டை வைத்திருப்பவருக்கு விதிக்கப்பட்டு அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.8 அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும் அனைத்து பண முற்பணங்களுக்கும் வங்கியால் தீர்மானிக்கப்படவுள்ள வீதத்தில் பண முற்பணக் கட்டணம் மற்றும் /அல்லது ஒரு கையாளுகைக் கட்டணம் அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும். அட்டையின் அடிப்படையில் கொள்வனவுசெய்யப்பட்ட, உடனடியாக பணமாக மாற்ற முடியுமான கேட்பு வரைவோலை, டெலிகிராபிக் பரிமாற்றல்கள் போன்றனவும் பண முற்பணங்களாக கருதப்பட்டு, அவை மேற்படி கட்டணங்களுக்கு உட்படும்.

4.9 அட்டையின் பேரில் குறித்தொதுக்கப்பட்ட உச்சவரம்பானது பட்டியலிடல் காலப்பகுதியின் ஏதேனும் வேளையில் மீறப்படின் உச்சவரம்பு மீறல் கட்டணமொன்று வங்கியால் தீர்மானிக்கப்படவுள்ள வீதத்தில் அறவிடப்பட்டு, அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

குறித்தொதுக்கப்பட்ட கடன் உச்சவரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிக்கும்போது ஏதேனும் வட்டித் தொகை, அறவிடப்பட்ட வரி மற்றும் வங்கிக் கட்டணங்களின் தொகையும் கருத்திற்கொள்ளப்படும்.

4.10 இலங்கையில் உள்ள பெற்றோல் நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யப்படும் பெற்றோல், டீசல், எரிவாயு மற்றும் வேறு பொருள்களுக்கான எல்லாக் கொடுப்பனவுகளும், வங்கியால் தீர்மானிக்கப்படவுள்ள வீதத்தில் அட்டைக் கணக்கில் பற்றுவைக்கப்படக்கூடிய மிகைக்கட்டணமொன்றுக்கு உட்படும்.

4.11 இலங்கையில் அல்லாது வேறு ஒரு நாட்டில், 2016 ஜனவரி 01ஆந் திகதிக்குப் பின்னர், செய்யப்படுகின்ற அனைத்து கிரடிட் கார்ட் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டையை சமர்ப்பித்தாலும் சமர்ப்பிக்காவிட்டாலும் அட்டை வைத்திருப்பவரின் அட்டை கணக்கிற்கு முத்திரை கட்டணம் அறவிடப்படும். இது அட்டை வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தலின்றி காலத்திற்கு காலம் திருத்தப்படுகின்றவாறு விதிக்கப்படும் நியதிச்சட்ட கட்டணமாகும்.

4.12 மாறும் பணப் பரிவர்த்தனை (DCC) என்பது Visa / Master சேவை அல்லவென்பதையும் வர்த்தகர்கள் மற்றும் ATM இயந்திரங்கள் அதனை வழங்குவது அவர்களின் பெறுகை வங்கிகள் ஊடாக என்பதையும் அட்டை வைத்திருப்பவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். கொடுக்கல்வாங்கலை நிறைவுசெய்யும் சந்தர்ப்பத்தில் வர்த்தகர்கள் அல்லது ATM இயந்திரத்தினால் அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொண்ட நாணயத்திற்கு விளம்பரப்படுத்தப்பட்ட விலையை மாற்றுவர் என்பதுடன், பொதுவாக, பரிமாற்றத்திற்கு கிட்டிய ஒரு இலாபம் (மொத்த பரிமாற்ற வீதம் அல்லது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட வீதத்தின் படி) இதன் போது விதிக்கப்படும். DCC ஐ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் தெரிவு அட்டை வைத்திருப்பவருக்கு உள்ளது என்பதுடன், வர்த்தகர்கள் அல்லது ATM இயந்திரத்தினால் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் DCC தெரிவை செயற்திறமாக தெரிவுசெய்தல் வேண்டும். அட்டை வைத்திருப்பவரினால் DCC நிராகரிக்கப்படுமாயின், வர்த்தகர்கள் அல்லது ATM இயந்திரத்தினால் உள்நாட்டு நாணயத்தில் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். நாணயமாற்று விகிதங்களில் மாற்றங்கள் தொடர்பில் இடர்நிலைமையை குறைப்பதற்கு, மாறும் பணப் பரிவர்த்தனை அல்லது

பல்வகை நாணய கொடுக்கல்வாங்கல் முறைமையில் மேற்கொண்டு இலங்கை ரூபாவில் பட்டியலிடப்பட்ட ஆனால் வெளிநாட்டு வர்த்தகர்கள் சேவை வழங்குனர்கள் மற்றும் இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்டுள்ள இணையத்தளங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து அட்டை கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் இலங்கை ரூபா கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் அடிப்படையில், செயன்முறைப்படுத்தல் கட்டணமொன்று அறவிடப்படும். இது வங்கியினால் விதிக்கப்படும் கட்டணமாகும் என்பதுடன், சந்தை வீத ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப அட்டை வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தலின்றி காலத்திற்கு காலம் மாற்றப்பட முடியும்.

## 5. மேலதிக அட்டைகள் மற்றும் /அல்லது துணை அட்டைகள்

மேலதிக அட்டைகள் / துணை அட்டைகள் நேரடி குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்

5.1 அட்டை வைத்திருப்பவரும் மேலதிக /துணை அட்டை கோருபவரும் (கோருபவர்களும்) கூட்டாக எழுத்து மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில், வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் மேலதிக/ துணை அட்டையை (அட்டைகளை) வழங்க முடியும். அட்டையின் பாவனை மற்றும் மேலதிக/ துணை அட்டையின் பாவனை என்பவற்றிற்கு அட்டை வைத்திருப்பவரும் மேலதிக/ துணை அட்டை வைத்திருப்பவரும் (வைத்திருப்பவர்களும்) தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாவார்கள். எந்தவொரு மற்றும் /அல்லது ஒவ்வொரு மேலதிக/ துணை அட்டை வைத்திருப்பவரும் (வைத்திருப்பவர்களும்) இந்த உடன்படிக்கையின் சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவர்களாவர்.

ஏதேனும் சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, அட்டை பாவனைத் தொடர்பில் அட்டை வைத்திருப்பவர் மற்றும் மேலதிக/ துணை அட்டை வைத்திருப்பவர் (வைத்திருப்பவர்கள்) தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாவதற்கு மேலதிகமாக, அட்டை உரிமையாளர் மற்றும் மேலதிக /துணை அட்டை வைத்திருப்பவர் (வைத்திருப்பவர்கள்) என்ற இரு தரப்பினராலும் உறப்படும் ஏதேனும் அல்லது சகல பொறுப்புக்களுக்கும் அட்டை வைத்திருப்பவரே இறுதிப் பொறுப்பாளியாவார்.

5.2 மேலுள்ள பிரிவு 5.1இலிலுள்ள தேவைகள் எவ்வாறிருப்பினும், அட்டை வைத்திருப்பவர் தன்னில் நேரடியாகத் தங்கிருக்கும் 16 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட பராயமடையாதவருக்கு (பராயமடையாதவர்களுக்கு) மேலதிக அட்டைகளை வழங்கும்படி வங்கியிடம் விண்ணப்பிக்க விரும்பினால், சம்பந்தப்பட்ட பராயமடையாதவரின்

(பராயமடையாதவர்களின்) கல்வி நோக்கத்திற்காக மட்டுமே அத்தகைய விண்ணப்பத்தை எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும். வங்கி தனது தற்றுணிபின் பேரில் அத்தகைய மேலதிக அட்டையை (அட்டைகளை) வழங்கக்கூடும். மேற்குறிப்பிட்டவாறு, பராயமடையாதவர்களுக்கு மேலதிக அட்டை (அட்டைகள்) வழங்கப்படும் பட்சத்தில், அத்தகைய துணை அட்டை வைத்திருப்பவரினாலும் வைத்திருப்பவர்களினாலும் செய்யப்படும் ஒவ்வொரு மற்றும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்பாளியாவதுடன், அட்டை வைத்திருப்பவர் மற்றும் மேலதிக அட்டை வைத்திருப்பவர் (வைத்திருப்பவர்களினால்) உறப்படும் சகல பொறுப்புக்களுக்கும் அட்டை வைத்திருப்பவரே இறுதிப் பொறுப்பாளியாவார்.

பிரதான மற்றும் மேலதிக அட்டை வைத்திருப்பவர்களுக்கான வருடாந்த கட்டணம் பிரதான அட்டை ஆரம்பிக்கப்பட்ட திகதியின் ஒரு வருட நிறைவின்போது அறவிடப்படும்.

## 6. ATMஇயந்திரங்கள்/ இணைய வங்கிச் சேவை / செல்லிட வங்கிச் சேவை/தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN)

6.1 கிரடிட் அட்டையில் தன்னியக்க டெலர் இயந்திரம் (ATM) / இணைய வங்கிச் சேவை / செல்லிட வங்கிச் சேவை வசதி சேர்க்கப்பட்டிருப்பின், ATM இயந்திரத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் விற்பனை முனையில் (POS) அல்லது வேறு வகையில் வங்கிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அத்தகைய கிரடிட் கார்ட்டினால் அத்தகைய இலத்திரனியல் முறைகளைப் பயன்படுத்த முடியும். அத்தகைய வங்கிச் சேவையை அணுகும் வசதி இந்த உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளுக்கு மேலதிகமாக ATM இயந்திரங்கள்/ இணைய வங்கிச் சேவை / செல்லிட வங்கிச் சேவை தொடர்பான வங்கியின் சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அமைவானதாக இருக்கும். இந்த நியதி நிபந்தனைகளின் பிரதிகள், வங்கியின் ஏதேனும் கிளையில் வேண்டுகோளின் பேரில் கிடைக்கும்.

6.2 அட்டை வைத்திருப்பவரால் ATM/தொலைபேசி ஊடாக, இணைய வங்கிச் சேவை ஊடாக மற்றும் அல்லது செல்லிட வங்கிச் சேவை மூலம் நிறைவேற்றப்படும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எழக்கூடிய எவையேனும் சர்ச்சைகள் வங்கியால் புலனாய்வு செய்யப்படும் என்பதுடன், வங்கி திருப்தியுறும் வகையில் வேறு விதமாக நிரூபிக்கப்பட்டாலன்றி மேற்படி எவையேனும் முறைகளில் மேற்கொள்ளப்படும் எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் மீதான பொறுப்பு அட்டை வைத்திருப்பவரைச் சாரும்.

6.3 இதன்கண் அடங்கியிருப்பதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ATM கொடுக்கல் வாங்கலுக்கு PIN இலக்கம் முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதால், காணாமற்போன அட்டையொன்றைப் பற்றிய அறிக்கையிடுதல், பிரிவு 6.2இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு இடைநிறுத்தப்படவோ இல்லாதொழிக்கப்படவோ காரணமாக அமையாது. அட்டையை பாதுகாக்கும்படியும் கவனமாக வைத்திருக்கும்படியும் PIN இலக்கத்தை அட்டையிலிருந்து புறம்பாக வைத்திருக்கும்படியும் அட்டை வைத்திருப்பவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதனை செய்யத் தவறுவது அதிலிருந்து எழும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதாக அமையும்.

**7. SMS விழிப்பூட்டல்கள் வசதி**

7.1 “SMS விழிப்பூட்டல்கள்” என்பது அட்டை வைப்பாளரினால் வங்கியில் பதிவு செய்துள்ள மொபைல் இலக்கத்திற்கு SMS (குறுந்தகவல் சேவை) மூலம் அனுப்பப்படும் பிரத்தியேக செய்திகளைக் குறிக்கும். அட்டையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றி இச் சேவையின் ஊடாகத் தகவல் வழங்கப்படும்.

7.2 “சிறு கிரடிட் கார்ட் கூற்று” என்ற இந்த விசேட SMS தொடர்பாடல் சேவைக்கு புறம்பாக, உள்ளக இறுதி திகதிக்கு ஏற்ப வங்கியினால் ‘கொடுப்பனவு தொடர்பான நினைவூட்டல்’ உருவாக்கப்பட்டு, அட்டை உரிமையாளரின் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பாடல் செய்யப்படும்.

7.3 இந்த SMS விழிப்பூட்டல் வசதியானது, இலங்கையிலுள்ள தொலைத்தொடர்புகள் கட்டமைப்பு, இணைப்புத் தன்மை மற்றும் சேவைகளில் தங்கியுள்ளது என்பதை அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார். வங்கியினால் அனுப்பப்படும் SMS விழிப்பூட்டல்களின் நேரந்தவறாமை தொலைத்தொடர்புகள் தொழிலைப் பாதிக்கும் காரணிகளில் தங்கியுள்ளது என்பதையும் அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார். SMS விழிப்பூட்டல்கள் வழங்கப்படாமை, அவற்றின் தாமதம், அனுப்பீட்டில் ஏற்படும் தவறு, இழப்பு, சீர்குலைவு மற்றும் தவறான அனுப்பீட்டிற்கு வங்கியை பொறுப்பாளியாக்க முடியாது.

7.4 அட்டை வைத்திருப்பவர் வெளிநாடு செல்லும்போது SMS விழிப்பூட்டல்களைப் பெற விரும்பினால், அவரது ரோமிங் மற்றும்/அல்லது சர்வதேச மொபைல் இலக்கத்தை வங்கிக்கு வழங்க வேண்டும். சில நாடுகளில் குறித்த நாட்டின் /பிராந்தியத்தின் சட்ட, ஒழுங்குபடுத்தல்

தேவைகள் மற்றும் வரையறைகள் காரணமாக SMS விழிப்பூட்டல்களைப் பெற முடியாதிருக்கலாம்.

7.5 எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அட்டை வைத்திருப்பவர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறியிருந்தால், வங்கியின் எவையேனும் உரிமைகளுக்கு முரணாகாத வகையில், முன்னறிவித்தல் கொடுத்த பின், எவ்வித காரணமும் காட்டாமல், SMS விழிப்பூட்டல் வசதியில் மாற்றங்களைச் செய்ய, SMS விழிப்பூட்டல் வசதியை இடைநிறுத்த மற்றும்/அல்லது முடிவுறுத்தவும் மற்றும் SMS விழிப்பூட்டல் வசதியின் சட்டதிட்டங்களை மாற்றுவதற்கு வங்கிக்கு மற்றும் /அல்லது நிறுவனங்களுக்கு உரிமை உள்ளது.

7.6 அட்டை வைத்திருப்பவர் மொபைல் தொலைபேசி இலக்கத்தை மாற்றும்படி எழுத்து மூலம் வங்கிக்கு அல்லது வங்கியின் அழைப்பு நிலையத்திற்கு வேண்டுகோள் விடுக்கலாம். இது வங்கியின் ஊர்ஜிதப்படுத்தலுக்கு உட்படும். அட்டை வைத்திருப்பவரினால் கோரப்பட்ட மாற்றத்தை/மாற்றங்களைச் செய்ய வங்கிக்கு மூன்று (03) வேலை நாட்கள் வரையில் எடுக்கும்.

7.7 SMS விழிப்பூட்டல் வசதியானது, வங்கியின் இணையத்தளத்தில் சேவைக் கட்டணம் என்பதன் கீழ் கிடைக்கக்கூடிய மற்றும் வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தின் படி, அட்டை கணக்கில் பற்றுவைக்கப்படக்கூடிய கையாளுகை கட்டணத்திற்கு உட்படும்.

## 8. முடிவுறுத்துதல்

8.1 அட்டை வைத்திருப்பவர் மற்றும் மேலதிக/ துணை அட்டை வைப்பாளர்கள் எந்த நேரத்திலும் அட்டையையும் எவையேனும் மேலதிக /துணை அட்டைகளையும் இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டதாக இணைத்து வங்கிக்கு எழுத்திலான அறிவித்தலை வழங்குவதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்தலாம்.

8.2 வங்கியானது அதன் தனித் தற்றுணிபின்பேரில், முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, அல்லது முன்னறிவித்தலின்றி எந்த நேரத்திலும் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்தலாம் அல்லது அட்டையை இரத்துச் செய்யலாம் அல்லது அதனைப் புதுப்பிக்க மறுக்கலாம். அத்தகைய முடிவுறுத்துதல் இடம்பெறும் வரையிலும், அவ்வாறு இடம்பெற்றாலன்றியும் வங்கியானது காலத்திற்குக் காலம் ஒரு புதிய அட்டையை (“புதுப்பிக்கப்பட்ட அட்டை”) அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கலாம்.

8.3 மேலுள்ள சரத்து 8.2இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வெளிநாட்டு நாணயமாற்றுச் சட்டங்கள் மற்றும்/அல்லது அவற்றின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பிரமாணங்கள்/பணிப்புரைகளுக்கு உட்படும் விதத்தில் பின்வரும் ஏதேனும் நிகழ்வுகள் இடம்பெறும் பட்சத்தில் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்தவும் அட்டையை இரத்துச்செய்யவும் மற்றும்/அல்லது புதுப்பிக்க மறுக்கவும் வங்கிக்கு உரிமையுண்டு:

(i) இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் அட்டை வைத்திருப்பவரினால் அனுசரிக்கப்படாதிருத்தல் மற்றும்/அல்லது மீறப்படுதல்

(ii) ஏதேனும் தவறுகை நிகழ்வு அல்லது அட்டை வைத்திருப்பவா் வங்கியுடன் செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம், ஏற்பாடு அல்லது வாக்குறுதியின் (தற்காலிக அல்லது வேறு விதமான) தவறுகை

(iii) அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் வங்கி முறிவு அல்லது கடனிறுக்க வகையறவு தொடா்பான வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது ஒத்த தன்மையினவான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதல்.

(iv) அட்டை வைத்திருப்பவா் மரணமடைதல்.

8.4 அட்டைக் கணக்கில் நிலுவையாகவுள்ள மீதி முழுவதும் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட, ஆனால் இன்னமும் அட்டைக் கணக்கில் அறவிடப்படாது நிலுவையிலிருக்கும் அட்டைக் கொடுக்கல் வாங்கல்களின் ஏதேனும் தொகையுடன் சேர்த்து இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும்போது அல்லது அட்டை வைத்திருப்பவா் வங்கி முறிந்தவராகும்போது அல்லது மரணமடையும்போது வங்கிக்கு வருமதியாதலும் முழுமையாக உடனடியாக செலுத்தப்படுதலும் வேண்டும். அட்டை வைத்திருப்பவரும் அத்துடன்/அல்லது அவரது மரணச் சொத்துக்களும் அட்டைக் கணக்கிலுள்ள ஏதேனும் நிலுவையை செலுத்தித் தீர்ப்பதற்கு பொறுப்பேற்க வேண்டும். அத்துடன் எல்லா செலவுகள், அறவீடுகள், (சட்டக் கட்டணம் உட்பட) நிலுவையிலுள்ள அத்தகைய வருமதியை மீட்டுப்பெறுவதில் ஏற்பட்ட செலவுகள் என்பவற்றிற்கு எதிராக வங்கியை நட்டோத்தரவாதம் செய்வித்தலும் வேண்டும். அத்தகைய அட்டை கணக்கின் மொத்த நிலுவையும் தீர்க்கப்படாதிருப்பின் மற்றும் தீர்க்கப்படும் வரை நிதி அறவீடுகளையும் வேறு கட்டணங்களையும் விதிப்பனவுகளையும் அதன் நடைமுறையிலுள்ள வீதங்களின்படி தொடா்ந்து அறவிடுவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

8.5 இரு தரப்பினருள் எந்தத் தரப்பினராலேனும் இந்த முடிவுறுத்தல் செய்யப்பட்டாலும் அத்தகைய முடிவுறுத்தலின் போது அட்டை கணக்கின் மீதுள்ள (வட்டி, வரிகள் மற்றும் கட்டணங்கள் உட்பட) மொத்த அட்டையின் பாவனையால் ஏற்படும் எல்லா மேலதிக அறவீடுகளுக்கும் அட்டை வைத்திருப்பவர் தொடர்ந்து பொறுப்புடையவராதல் வேண்டும்.

**9. அட்டை காணாமற்போதல்**

9.1 அட்டை காணாமற்போனமை அல்லது களவுபோனமை பற்றி அவ்வாறு காணாமற்போனமை அல்லது களவு போனமை கண்டுபிடிக்கப்பட்டதும் (அல்லது வெளிநாட்டிலிருப்பின் Visa கார்ட் ஆயின் Visa கார்ட் உறுப்பினருக்கும் அல்லது MasterCard ஆயின் MasterCard உறுப்பினர் எவருக்கும்) தொலைபேசி அல்லது தொலைநகல் ஊடாக வங்கியின் தொடர்பு நிலையத்திற்கும் எழுத்துமூலம் பொலிசுக்கும் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும். ஆனால் ஏதேனும் அத்தகைய விடயத்தில் அட்டை வைத்திருப்பவரின் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அட்டோர்ணித் தத்துவக்காரரால் அவரது கைப்பட கையொப்பமிடப்பட்டு அத்தகைய தொலைபேசி அல்லது மின்னஞ்சல் தகவல் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அட்டை காணாமற்போனமை அல்லது களவு போனமை வங்கிக்கு அறிவிக்கப்பட்டு, அதன் பின்னர் மேற்கூறப்பட்டவாறு விடயத்திற்கேற்ப வங்கியின் அட்டை நிலையத்திற்கு அல்லது Visa/MasterCard உறுப்பினர் எவருக்கும் உறுதிப்படுத்தப்படும் வரை அதிகாரமளிக்கப்படாத பாவனையின் விளைவாக இன்னமும் அட்டை கணக்கில் பற்று வைக்கப்படாமல் பாக்கியிருக்கும் எல்லா தொகைளுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்புடையவராதல் வேண்டும். அட்டை வைத்திருப்பவர் காணாமற்போன அல்லது களவுபோன அட்டையை மீண்டும் கண்டெடுக்கும் பட்சத்தில் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட அட்டையை/அட்டைகளை வங்கிக்கு உடனடியாக திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

9.2 அட்டை வைத்திருப்பவர் அட்டை காணாமற்போனமை, களவு போனமை அல்லது தவறான பயன்பாடு தொடர்பான எல்லா சூழ்நிலைகளையும் பற்றி அவரது உடைமையிலுள்ள எல்லா தகவல்களையும் வங்கிக்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன், காணமற்போன அட்டையை மீட்டுப்பெறுவதில் வங்கியால் அவசியமானவை எனக் கருதப்படும் எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு வங்கிக்கு உதவி புரிதலும் வேண்டும்.

9.3 அட்டை களவுபோனதை அல்லது காணாமற்போனதையடுத்து அட்டை வைத்திருப்பவருக்குப் பதிலீட்டு அட்டையொன்றை வழங்குவதற்கான கடப்பாடு எதுவும் வங்கிக்குக் கிடையாது. ஏதேனும் பதிலீட்டு அட்டை வழங்கப்படும் பட்சத்தில், அது கையாளுகைக் கட்டணமொன்றுக்கு உட்படும். இக் கட்டணம் வங்கியால் தீர்மானிக்கப்படும் வீதமொன்றின்படி அட்டைக் கணக்கில் பற்றுவைக்கப்படும். பதிலீட்டு அட்டையானது ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அட்டையைப் போன்று அதே நியதி நிபந்தனைகளின் பேரிலேயே வழங்கப்படும்.

**10. பொது**

10.1 தனக்கு குறித்தொதுக்கப்பட்ட கடன் உச்ச வரம்பை தாண்டுவதற்கு அட்டை வைத்திருப்பவரினால் வங்கியிடமிருந்து எழுத்துமூல முன் அனுமதியை பெற்றிருந்தாலேயன்றி, குறித்தொதுக்கப்பட்ட கடன் வரம்பினுள் இருப்பதற்கு அட்டை வைத்திருப்பவர் உறுதியளிப்பதுடன், மொத்த நிலுவைத் தொகையையும் அத்தகைய கடன் வரம்புகளை மீறுவதற்கு காரணமாக அமையும் எந்த வகையான கொடுக்கல் வாங்கல்களையும் செய்யாதிருப்பதற்கும் மேலும் உறுதியளிக்கின்றார்.

10.2 முகவரிகள், தொழில் விபரங்கள், தொலைபேசி இலக்கங்கள் உள்ளடங்கலாக விண்ணப்பத்தில் அட்டை வைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட தகவல்களில் எவையேனும் மாற்றங்கள் ஏற்படின், அட்டை வைத்திருப்பவர் அத்தகைய மாற்றங்களை (கூட்டாக "தொடர்பு விபரங்கள்" எனப்படும்) எழுத்து மூலம் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அட்டை விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தொடர்பு விபரங்களையே மிகப் பிந்திய தொடர்பு விபரங்களாக வங்கி கருதும். இச் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் எவையேனும் மாற்றங்கள் வங்கிக்கு முறைப்படி அறிவிக்கப்பட்டால் மாத்திரமே விண்ணப்பத்திலுள்ள தொடர்பு விபரங்கள் மாற்றப்படும்.

10.3 தபால் மூலம் அனுப்பப்படும் ஏதேனும் அறிவித்தல் அல்லது அட்டை வைத்திருப்பவருடனான கடிதத் தொடர்புகள் அட்டை வைத்திருப்பவரால் எழுத்து மூலம் வங்கிக்கு வழங்கப்பட்ட கடைசி முகவரிக்கு அனுப்பப்படும் என்பதுடன் தபாலில் இடப்பட்ட ஏழு (7) நாட்களுக்குள அட்டை வைத்திருப்பவருக்குக் கிடைத்துவிட்டதாகவும் கருதப்படும்.

10.4 வங்கியால் தேவைப்படுத்தப்படும்போது அட்டை வைத்திருப்பவர் அவரது நிதி நிலைமை பற்றிய தகவல்களை வங்கிக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்களை விசாரித்து ஊர்ஜிதம்செய்ய அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

கோரப்படும்போது தகவல்கள் வழங்கப்படாவிட்டால், வங்கி அதன் தற்றுணிபின்படி அட்டையைப் புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது அட்டையை உடனடியாக இரத்துச்செய்யலாம்.

10.5 வங்கியிடமுள்ள சான்றின் அடிப்படையில் (அட்டை வைத்திருப்பவரால் அல்லது வேறு வகையில் வழங்கப்பட்டது) அட்டை வைத்திருப்பவர் தனது அட்டை கணக்கை அல்லது அட்டையை மோசமாக உதாசீனம் செய்துள்ளார் (இதில் அட்டையை, கணக்கை அல்லது PIN இலக்கத்தைப் பாதுகாக்கத் தவறியமை, காணாமற்போன அட்டை அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பற்றி அறிவிக்கத் தவறியமை என்பன அடங்கும்) அல்லது மோசடி செய்துள்ளாரென வங்கி அபிப்பிராயப்படின், அட்டை மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்கு அட்டை வைத்திருப்பவரின் அட்டை தொடர்பிலான பொறுப்பு அதிகரிக்கப்படும். அட்டையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறிப்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்/அல்லது குறிப்பிட்ட வணிக நிறுவனத்தில் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட விடயங்கள் திட்டவட்டமான விசாரணைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென வங்கி தீர்மானிக்கும் பட்சத்திலும் அட்டை வைத்திருப்பவரின் கணக்கு வரலாறு திருப்தியற்றிருக்கும் பட்சத்திலும் அல்லது கொடுக்கல் வாங்கலின் தன்மை பணம் மீளளிப்பு செய்யப்படாதிருப்பதை நியாயப்படுத்தும் பட்சத்திலும் சர்ச்சைக்குட்பட்ட எவையேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கு வங்கி மீளளிப்பு செய்ய மாட்டாது என்பதற்கு அட்டை வைத்திருப்பவர் உடன்பட்டு, அதனை ஏற்றுக்கொள்கிறார்.

10.6 பங்குபற்றுநர் ஒருவர் அட்டையின் ஊடாக பணத்தை அல்லது பணத்தின் பெறுமதியைச் செலுத்துமாறு அல்லது பங்களிப்பை வழங்குமாறு தேவைப்படுத்தப்படுமிடத்தும் பங்குபற்றுநர்களினால் ஈட்டப்பட்ட நன்மைகள் பெரும்பாலும் பின்வருவனவற்றில் தங்கியிருக்குமிடத்தும், அட்டை வைத்திருப்பவர் அத்தகைய செயற்றிட்டமொன்றை நேரடியாக அல்லது மறைமுகமாக முனைவு செய்தலோ ஊக்குவித்தலோ விளம்பரப்படுத்துதலோ நடத்துதலோ அதற்கு நிதியளிப்பு செய்தலோ அதனை முகாமை செய்தலோ அல்லது நெறிப்படுத்துதலோ ஆகாது.

(a) செயற்றிட்டத்தில் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் அல்லது
(b) பங்குபற்றுநர்களின் செயற்றிட்டத்திற்கான பங்களிப்பு அதிகரிக்கப்படுதல்

வங்கியானது அட்டை வைத்திருப்பவரின் அட்டைக் கணக்கில் தவறுதலாக வரவுவைக்கும் பட்சத்தில், எந்த நேரத்திலும் மேற்படி பதிவை நேர்மாற்றம் செய்வதற்கு மற்றும்/அல்லது மேற்படி தொகையை அட்டை வைத்திருப்பவரிடமிருந்து கோருவதற்கு வங்கி உரித்துடையதாகும்.

10.7 வங்கி அதன் பூரண தற்றுணிபின்பேரில் அட்டைக் கணக்கில் நிலுவையிலுள்ள தொகை/ தொகைகள் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அட்டை வைத்திருப்பவருக்கு உரிய முறையில் அறிவித்து மூன்றாம் திறத்தவரான சேகரிப்பு முகவருக்கு கைமாற்றலாம், சாட்டுதல் செய்யலாம் அல்லது விற்பனைசெய்யலாம். அட்டைக் கணக்கில் நிலுவையிலுள்ள தொகைகளை அறவிடுவதற்கு மூன்றாம் திறத்தவர்களான சேகரிப்பு முகவர்களை நியமிப்பதற்கு அட்டை வைத்திருப்பவர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். அட்டை வைத்திருப்பவர் நிலுவைத் தொகையை சேகரிப்பதற்கான எல்லா செலவுகளையும் சேகரிப்பு முகவருக்கு ஆற்றுப்படுத்துவதற்கான அல்லது கொடுப்பனவை வலுவுறுத்துவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அவசியம் ஏற்படின் நிதி அறவீடு, சட்டச் செலவுகள் சேகரிப்பு முகவரின் அறவீடுகள் என்பவற்றுடன் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

10.8 வங்கியின் கணக்குக் கூற்றுக்கள் மற்றும்/ அல்லது அறிவித்தல்கள் திருப்பியனுப்பப்படும்பட்சத்திலும் அத்துடன் அட்டை வைத்திருப்பவருடன் தொடர்புகொள்ள முடியாதபட்சத்திலும் கணக்குக் கூற்றுக்களை அத்துடன்/ அல்லது கடிதத்தொடர்புகளை விண்ணப்பத்தில் குறித்தொதுக்கப்பட்ட வேறோர் முகவரிக்கு திருப்பியனுப்பும் உரிமையை வங்கிகொண்டுள்ளது.

10.9 அட்டை, அட்டை வைத்திருப்பவர் மற்றும் / அல்லது அட்டை கணக்குத் தொடர்பிலான தகவல் உட்பட எல்லா தரவுகளும் ஏதேனும் அமைவிடத்திற்கு அனுப்பப்படலாம் அத்துடன்/தேக்கி வைக்கப்படலாம் அல்லது வைத்திருக்கப்படலாம் அத்துடன் வங்கியின், அதன் தலைமை அலுவலகத்தின, வஙகியின் கிளை அலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட பணியாட்தொகுதியினரால் அத்துடன் வங்கித்தொகுதியின் வேறு உறுப்பினர்களால்/இணை உறுப்பினர்களால் அல்லது எவரேனும் தகவல் முறைவழிப்படுதும் சேவை வழங்குநரால் அல்லது கணக்குக் கூற்றுக்களை அச்சிட்டு அஞ்சல் செயவதற்கான அல்லது நிர்வாகம் அத்துடன் உள்ளக கண்காணிப்புத் தேவைப்பாடுகள் உட்பட ஏதேனும் நோக்கத்திற்கு அவசியமாகின்றவாறு எவையேனும் சேவைகளுக்கு அணுக்கம் பெறலாம் என்பதற்கு அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார் என்பதுடன் ஒப்புறுதியும் செயகின்றார்.

10.10 வங்கியானது அட்டை வைத்திருப்பவரின் அட்டைக் கணக்கில் தவறுதலாக வரவுவைக்கும் பட்சத்தில், எந்த நேரத்திலும் மேற்படி பதிவை நேர்மாற்றம் செய்வதற்கு மற்றும்/அல்லது மேற்படி தொகையை அட்டை வைத்திருப்பவரிடமிருந்து கோருவதற்கு வங்கி உரித்துடையதாகும்.

10.11 அட்டைக் கணக்கிற்கு முன்னரேயே பணத்தை நிரப்புவது தடைசெய்யப்பட்டதாகும் என்பதை அட்டை வைத்திருப்பவர் விளங்கி, வங்கியுடன் அது சம்பந்தமாக உடன்படுவதுடன், அட்டைக் கணக்கில் ஒரு வரவு மீதி இருக்கும் பட்சத்தில், அத்தகைய வரவு மீதிகளை அட்டை வைத்திருப்பவரினால் வங்கியில் பேணி வரும், பற்று மீதியுடனான வேறு கிரடிட் கார்ட்டுக்கு மாற்ற அல்லது இலங்கை ரூபாவில் உள்ள சேமிப்புக் கணக்கிற்கு அல்லது இலங்கை ரூபாவில் உள்ள நடைமுறை கணக்கிற்கு மாற்ற அல்லது அட்டை வைத்திருப்பவரின் பெயரில் காசாளர் கட்டளையொன்றை வெளியிட வங்கி நடவடிக்கை எடுக்கும்.

## 11. தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்துதல்களுக்கு அதிகாரமளித்தலும் நட்டோதரவாதமும்

11.1 அட்டை வைத்திருப்பவரால் அல்லது அவர் சார்பில் தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் வாயிலாக காலத்துக்குக் காலம் கொடுக்கப்படக்கூடிய அல்லது அறிவித்தல், கோரிக்கை அல்லது வேறு தொடர்பாடல் ("அறிவுறுத்துதல்கள்") என்பனமீது கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்பட்டதாக கருதப்பட்ட ஆளின் அதிகாரம் அல்லது ஆளடையாளம் பற்றி வங்கியால் விசாரணை எதுவுமின்றியும் அறிவுறுத்துதல்கள் கிடைக்கப்பெற்ற நேரத்தில் நிலவும் சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமலும் அதன்மீது தங்கியிருக்கவும் அதற்கிணங்க செயற்படவும் அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். அறிவுறுத்துதல் கிடைக்கப்பெற்ற நேரம்/திகதி தொடர்பான வங்கியின் விதிமுறையை அட்டை வைத்திருப்பவர் இறுதியானதாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

11.2 அறிவுறுத்துதல்களை அட்டை வைத்திருப்பவரால் முற்றிலும் அதிகாரமளிக்கப்பட்டதாகவும் அதன்மீது பிணிக்கப்பட்டதாகவும் கருதுவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அறிவுறுத்துதல்கள் பணம் செலுத்துவதற்காயினும்சரி வேறு வகையில் ஏதேனும் கணக்கில் வரவு வைப்பதற்காயினும்சரி பற்று வைப்பதற்காயினும்சரி ஏதேனும் பணத்தை அல்லது ஆவணங்களை உடைமையகற்றுவதற்காயினும்சரி கொடுக்கல் வாங்கலின் அல்லது ஏற்பாட்டின் தன்மையை அல்லது சம்பந்தப்பட்ட பணத்தின் தொகையைப் பொருட்படுத்தாமலும் அறிவுறுத்துலின் நியதிகளில் ஏதேனும் தவறு, கருத்துமயக்கம், கருத்து வேறுபாடு அல்லது தெளிவின்மை என்பன எவ்வாறிருப்பினும் அட்டை வைத்திருப்பவரை வங்கியுடன் அல்லது எவரேனும் ஆளுடன் வங்கியுடனான அல்லது வேறு எவரேனும் ஆளுடான ஏதேனும் உடன்படிக்கையுடன் அல்லது ஏதேனும் ஏற்பாட்டுடன் பிணிப்பதாகக் கருதுவதற்கு தோதானதென வங்கி கருதக்கூடியவாறு அறிவித்தல் தொடர்பாக அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அல்லது அவற்றில் நம்பியிருப்பதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

11.3 இந்த அதிகாரமளிப்பின் நியதி நிபந்தனைகளுக்கிணங்க வங்கி செயற்படுவதற்குக் கிரயமாக அட்டை வைத்திருப்பவர் அறிவுறுத்துதல்கள் அல்லது அவை தொடர்பாக எத்தன்மையதாகவும் எது விதத்திலும் வங்கிக்கு உறப்படும் அல்லது ஏற்படும் எத்தன்மையதுமான எல்லா இழப்புகளிலும் உரிமைக் கோரிக்கைகளிலும் வழக்கு நடவடிக்கைகளிலும் செலவுகளிலிருந்தும் கோரிக்கைகளிலுமிருந்தும் வங்கியை அழிக்க முடியாதவாறு நட்டோத்தரவாதம் செய்யவும் நட்டோத்தவாதம் செய்துவைக்கவும் அட்டை வைத்திருப்பவர் இத்தால் பொறுப்பேற்கின்றார்.

11.4 இந்த அதிகாரமளிப்பினதும் நடடோத்தரவாதத்தினதும் நியதிகள் அட்டை வைத்திருப்பவரிடமிருந்து முடிவுறுத்துதல் பற்றிய அறிவித்தலைப் பெற்று அதன்மீது செயற்படுவதற்கு வங்கிக்கு நியாயமாக நேரகாலம் இருந்தாலன்றியும் இருக்கும்வரையிலும் முழு வலுவிலும் பயனுறுதியுடனுமிருத்தல் வேண்டும். எனினும் அத்தகைய முடிவுறுத்துதல் மேற்கூறப்பட்டவாறு அவரால் வழங்கப்பட்ட அதிகாரமளிப்பின்கீழ் அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க நிறைவேற்றப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் நட்டோத்தரவாதத்திலிருந்து உறப்பட்ட ஏதேனும் பொறுப்பிலிருந்து அட்டை வைத்திருப்பவரை விடுவிக்க மாட்டாது.

## 12. விலக்களிப்புகளும் புறநீக்கங்களும்

12.1 ஏதேனும் வர்த்தக தாபனம் அல்லது நிறுவனம் அட்டைக்கு மதிப்பளித்து அதனை ஏற்றுக் கொள்ள அல்லது அட்டையின் முழுமையானதும் அதிகாரமளிக்கப்பட்டதுமான கடன் வரையறைக்கும் பண முற்பணங்களின் விடயத்தில் முழுமையானதும் அதிகாரமளிக்கப்பட்டதுமான பண முற்பண வரையறைக்குக் கடன் வசதியை நீடிக்க மறுப்பதற்கும் வங்கி பொறுப்பு எதனையும் ஏற்கமாட்டாது.

12.2 அட்டையை அல்லது அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட பொருட்களில் அத்துடன்/அல்லது சேவையில் உள்ள ஏதேனும் குறைபாட்டிற்கு அல்லது பற்றாக்குறைக்கு வங்கி பொறுப்பாக மாட்டாது. பொருட்களை அத்துடன்/அல்லது சேவைகளை விற்பனைக்கு அல்லது பாவனைக்கு வழங்கும் விதத்தில் எவையேனும் விளம்பரங்களில், புத்தகங்களில், சஞ்சிகைகளில், பருவ இதழ்களில், அஞ்சல் கட்டளைப் படிவங்களில், விவரத் தொகுப்புகளில் அல்லது வேறு ஆவணங்களில் செய்யப்படும் அல்லது அடங்கியுள்ள ஏதேனும் கூற்றுகளுக்கு, வார்த்தைகளுக்கு, படங்களுக்கு அல்லது வேறு குறிப்படையாளங்களுக்கு வங்கி

பொறுப்புடையதாகமாட்டாது. வர்த்தகருக்கு எதிரான முறைப்பாடுகள் அட்டை வைத்திருப்பவரால் வியாபாரத் தாபனத்துடன்/ நிறுவனத்துடன் தீர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் வியாபார தாபனத்திற்கெதிரான உரிமைக்கோரிக்கைக்கான பொறுப்பிலிருந்து எதுவும் அட்டை அட்டை வைத்திருப்பவரினால் இந்த உடன்படிக்கையின்கீழ் வங்கியை விடுவித்திருக்க வேண்டும்.

12.3 வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாயினும்சரி வேறு வகையிலாயினும்சரி வேறு எதற்கும் அல்லது காரணத்திற்கும் ஏதேனும் ATM, தொடர்பாடல் முறைமை, தரவு முறைவழிப்படுத்தும் முறைமை, தகவல் அனுப்பும் இணைப்புகள் எதிலும் செயலிழப்பிற்கு அல்லது குறைபாட்டிற்கு அல்லது அவற்றினின்றெழும் எத்தன்மையதுமான ஏதேனும் அசௌகரியத்திற்கு, இழப்பிற்கு, சேதத்திற்கு அல்லது சங்கடத்திற்கு வங்கி எந்தவகையிலும் பொறுப்பெதனையும் ஏற்கமாட்டாது:

12.4 கணக்குக் கூற்றுத் திகதியாகவும் கொடுப்பனவு வருமதியாகும் திகதியாகவும் ஒவ்வொரு மாதமும் வங்கி திகதியொன்றைத் தெரிவு செய்யலாம். வங்கியால் அட்டை வைத்திருப்பவருக்கு கணக்குக் கூற்றொன்றை மாதாந்த அடிப்படையில் அனுப்ப இயலாதிருப்பினும் வருமதியான நிதிக் கட்டணங்களின் கொடுப்பனவு உட்பட அட்டை வைத்திருப்பவரின் பொறுப்பு தொடர்ந்து நிலைத்திருக்கும்.

12.5 அட்டையில் அடங்கியுள்ள புடைப்புப் பதிவின் அல்லது மீள்உருவாக்கத்தின் அச்சுப்பதிப்பை அல்லது மீள் உருவாக்கத்தைக் கொண்டுள்ள முறையாக பூர்த்திசெய்துள்ள ஏதேனும் விற்பனை வரைவை, கொடுக்கல் வாங்கல் பதிவை, கடன் உறுதிச் சீட்டை, பணச் செலவீட்டு வரைவை அத்துடன்/அல்லது வேறு அறவீட்டுப் பதிவை ஏற்றுக்கொள்வதற்கு வங்கி உரித்துடையதாதல்வேண்டும்.

12.6 எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் பற்றிய வங்கியின் பதிவேடுகள், விற்பனைச் சிட்டைகள், மற்றும் அட்டைக் கணக்குக் கூற்று என்பன எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானவையாகவும் அட்டை வைத்திருப்பவரைப் பிணிப்பனவாகவும் இருத்தல் வேண்டும் என்பதறகு அட்டை வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

12.7 வங்கியின் விவரத் தொகுப்புகளில், கூற்றுக்களில் அல்லது வெளியீடுகளிலுள்ள விளம்பரங்களால் வழங்கப்படும் சேவைகளின், உற்பத்திப் பொருட்களின் அல்லது நலன்களின் ஏதேனும் தவறுகை காரணமாக அல்லது அதன் விளைவாக எந்த வகையிலும் ஏற்படும் ஏதேனும்

தன்மையதுமான எவையேனும் உரிமைக் கோரிக்கைகளுக்கு எதுவிதத்திலும் வங்கி வாடிக்கையாளர் மட்டில் பொறுப்புடையதாக மாட்டாது.

12.8 அட்டைக் கணக்கில் வரவு இருப்பது எவ்வாறிருப்பினும் அவ்வாறு செய்வது பொருத்தமானது என வங்கி கருதினால் ஏதேனும் கொடுப்பனவை நிராகரிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

12.9 மீண்டும் மீண்டும் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களின் விடயத்தில் கொடுக்கல் வாங்கல்கள் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படுவதைத் தடுப்பதற்காக அட்டை வைத்திருப்பவர் வியாபாரியின் புதுப்பித்தல் கொள்கையை இல்லாதொழித்தல் வேண்டும் அத்துடன்/அல்லது அவற்றை அனுசரித்தல்வேண்டும். வியாபாரியின் புதுப்பித்தல் கொள்கையை இல்லாதொழிக்க அல்லது அதனை அனுசரிக்கத் தவறுவதற்கு வங்கி எதுவிதத்திலும் பொறுப்பாளியாக்கப்படுதலாகாது.

12.10 அட்டை வைத்திருப்பவரின் கிரெடிட் காா்ட் இலக்கம், காலாவதியாகும் திகதி மற்றும் தனிப்பட்ட விபரங்கள் உள்ளடங்கலாக வணிகருக்கு/நிறுவனத்திற்கு/களுக்கு வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அடுத்தடுத்த கொடுக்கல் வாங்கல்களின் தொடர்ச்சி / நிலையான அறிவுறுத்தல்களில் ஏதேனும் தடங்கல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, காா்ட் வைத்திருப்பவர் அத்தகைய மாற்றங்களை வணிகருக்கு/நிறுவனத்திற்கு/களுக்கு அறிவிக்க வேண்டும். வணிகரிடம் அல்லது நிறுவனத்திடம் உள்ள தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு புதுப்பிப்பதற்கு காா்ட் வைத்திருப்பவர் தவறுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு வங்கியை எவ்விதத்திலும் பொறுப்பாளியாக்க முடியாது.

## 13. சட்ட நடவடிக்கை

ஏதேனும் காரணத்திற்காக அட்டை வைத்திருப்பவர் இந்த அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளுடன் இணங்கியொழுகத் தவறுவாராயின் வங்கி அத்தகைய அட்டை வைத்திருப்பவரின் உடன்படிக்கையை முடிவுறுத்தலாம் என்பதுடன் அதன்கீழ் வருமதியாகவிருக்கும் எல்லா தொகைகளையும் மீட்டுப் பெறுவற்கு நடவடிக்கை எடுக்கலாம். முழு நட்டோத்தரவாத அடிப்படையில் சட்டக் கட்டணங்கள் உட்பட வங்கிக்கு ஏற்பட்ட எல்லா செலவுகளுக்கும் அறவீடுகளுக்கும் செலவினங்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் பொறுப்புடையவராதல் வேண்டும்.

## 14. செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்

14.1 அட்டை வைத்திருப்பவர் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இலங்கை மத்திய வங்கி மற்றும் அதன்கீழ் உள்ள வேறு ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் ("செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம்") ஏற்பாடுகள், செயற்படுத்தல் அறிவுறுத்துதல்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்குமிணங்க எல்லா நேரங்களிலும் அட்டையைத் தாம் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

14.2 பிரயாணம், தங்குமிடவசதி, மருத்துவம், சீவனம், பதிவுக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், வெளிநாட்டு குழுமத்திற்கு அல்லது கல்விசார் நிறுவனத்திற்கு செலுத்தப்படற்பாலதான தனிப்பட்ட தன்மையதான ஆண்டு ஒப்பப்பணக் கொடுப்பனவு, தனிப்பட்ட பாவனைக்கு வெளிநாட்டில் பொருட்களின் கொள்வனவுக்கான கொடுப்பனவு, தனிப்பட்ட இயல்பினதான பிரயான மற்றும் சுகாதாரக் காப்புறுதிக் கட்டுப்பணத்திற்கு மாத்திரம் மற்றும்/அல்லது பிரயாணச் செலவுகள், ஹோட்டல் கட்டணங்கள், இடைநேர் விளைவான செலவுகள், மருத்துவச்செலவுகள், தனிப்பட்ட பாவனைக்கு பொருட்களின் கொள்வனவு போன்ற தனிப்பட்ட செலவுகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் விலைப்பட்டியலிடப்படுவனவும் மின்னஞ்சல், இணையம், தொலைபேசி என்பன ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பிலான தனிப்பட்ட பாவனைக்கு மாத்திரமே அட்டை வைத்திருப்பவர் அட்டையை வெளிநாட்டில் பயன்படுத்தலாம். மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கும் அட்டை பயன்படுத்தப்படுதலாகாது.

14.3 மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கு கொடுப்பனவு செய்ய, வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் (Forex வர்த்தக கொடுக்கல்வாங்கல்) மெய்நிகர் நாணய கொடுக்கல்வாங்கல்கள் சார்ந்த கொடுப்பனவுகள், பந்தயம் கட்டுதல், இலங்கைக்கு வெளியே பணக் கொடுக்கல் வாங்கலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் விளையாட்டுக்கள் மற்றும் சூதாட்டம், வர்த்தக ரீதியிலான தொகைகளில் பொருள்களின் கொள்வனவு அல்லது இறக்குமதி என்பன தொடர்பிலான கொடுப்பனவுகளுக்கும் அட்டை பயன்படுத்தப்படுதலாகாது. தனிப்பட்ட பாவனைக்கான பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவு ஓர் இறக்குமதிச் சரக்குத் தொகுதியின் அடிப்படையில் ஆகும் செலவு, காப்புறதி, கேள்வு (CIF) என்பன மீது கட்டுப்பாட்டதிகாரியால் காலத்துக்காலம் குறிப்பிடக்கூடியவாறு உச்சவரம்பிற்கு மட்டுப்படுத்தப்படும். "தனிப்பட்ட பாவனை" என்பது அட்டை வைத்திருப்பவரினதும் அவரது வாழ்க்கைத் துணைவர், பிள்ளைகள், பெற்றோர் ஆகியோரின் பாவனைக்கு எனப் பொருள்படும். ஏதேனும் வர்த்தக நோக்கத்திற்கான பாவனையை அது உள்ளடக்க மாட்டாது.

14.4 அட்டை வைத்திருப்பவா் இலங்கை ரூபாவை வெளிநாட்டு நாணயமாக மாற்றுவதனை ஈடுபடுத்தும் இலங்கையிலிருந்து வெளிநாடு ஒன்றிற்கு மேற்கூறப்பட்டவாறு எவையேனும் கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு அட்டை வைத்திருப்பவரின் அட்டையைப் பயன்படுத்துவதற்கு மூன்றாம் திறத்தவா் எவரையும் அனுமதித்தலாகாது.

14.5 அட்டை வைத்திருப்பவா் நாட்டை விட்டுச்செல்லும்பட்சத்தில், வெளிநாட்டு வேலைக்காக இலங்கையை விட்டுச் செல்லும்பட்சத்தில், தற்பொழுது வலுவிலுள்ளதும் காலத்தக்குக்காலம் திருத்தப்படுவதுமான செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் வரைவிலக்கணத்தின்படி BFCAs, PFCAs, DFCAs, DRAs, IIAs, ERIAs க்கு எதிராக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் நிதிப் பரிமாற்றல் அட்டை அல்லது உள்வரும் பண அனுப்பீடுகள் ஊடாக நிலுவைத் தொகைகள் தீர்ப்பனவு செய்யும் அடிப்படை தவிர்ந்த, அட்டை வைத்திருப்பவரினால் அட்டை (அட்டைகள்) வங்கிக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அந்நியச் செலாவணி சட்டம், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பணக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்பான சட்டதிட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள், நாணயச் சபையினால் வகுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் கீழ் உள்ள ஏற்பாடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் வெளியிடப்பட்டு காலத்திற்கு காலம் குறித்துரைக்கப்படுகின்றவாறு தொடர்புடைய அறிவுறுத்தல்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைகளுக்கு ஏற்ப வங்கி நடவடிக்கை எடுக்கும்.

14.6 கிரடிட் கார்ட் ஊடாக ஒரு பண முற்பண வடிவில் வெளிநாட்டு நாணயங்களை மீளப் பெறுவது தொடர்பில், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அந்நியச் செலாவணிசட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஏற்பாடுகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களுக்காக அத்தகைய நாணயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்ற நியதிச்சட்ட பதிவை வைத்துக்கொள்ளும் தேவை வரையில், அட்டை வைத்திருப்பவர் அதுபற்றிய சான்றுகளை தன்னிடம் வைத்திருக்க வேண்டும்.

14.7 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அந்நியச் செலாவணிசட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி கட்டளைகளின் விடயப்பரப்பின் கீழ் வரும் எந்தவொரு நோக்கத்திற்காகவும், இலத்திரனியல் நிதிப் பரிமாற்ற அட்டையொன்றின் ஊடாக இலங்கைக்கு வெளியே குடியிருக்கும் ஒரு நபருக்கு ஏதேனும் ஒரு கொடுப்பனவைச்

செய்வதற்காக அட்டை வைத்திருப்பவரினால் அந்நியச் செலாவணி திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து அதற்காக எழுத்துமூலு முன் அனுமதியை கோர வேண்டும்.

14.8 கிரடிட் அட்டை மூலம் அந்நியச் செலாவணியில் இருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள் / பண மீளப் பெறல்கள் இடைநிறுத்தத்திற்கு உரிய விடாமுயற்சி மற்றும் உடனடி நடவடிக்கைகளுக்கான உரிமையை வங்கி கொண்டிருப்பதுடன், மேற்படி கட்டளைகளின் கீழ் அனுமதியளிக்கப்படாத நோக்கங்கள் தொடர்பில் அட்டை வைத்திருப்பவரினால் கொடுப்பனவு/ பண மீளப் பெறல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சந்தேகிப்பதற்கான நியாயமான காரணங்கள் இருக்கும் பட்சத்தில், அந்த விடயங்களை அந்நியச் செலாவணி திணைக்களத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்.

14.9 முதன்மை அட்டை உரிமையாளரும் இலங்கைக்கு வெளியே வதிகின்றவராக இருந்தாலேயன்றி, இலங்கைக்கு வெளியே வதிகின்ற நபர்களுக்கு துணை/ மேலதிக கடன் அட்டைகளை வழங்காதிருக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது என்பதுடன், துணை கூமேலதிக அட்டைகளை வழங்குதல் மற்றும் பாவனை, மேற்படி கட்டளைகளின் கீழ் உள்ள சட்டதிட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவானதாகும்.

14.10 ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நடைமுறையில் உள்ள அந்நியச் செலாவணி ஒழுங்குவிதிகளை மீறியுள்ளதாக நம்புவதற்கு எந்தவகையிலேனும் ஒரு காரணம் உள்ள நிலையில், அட்டை உரிமையாளருக்கு (உரிமையாளர்களுக்கு) முன்னறிவித்தல் இன்றி வங்கி அதன் தற்றுணிபின் படி அட்டை (அட்டைகளை) இரத்துச் செய்யலாம்.

14.11 அந்நேரத்தில் நடப்பு ரீதியில் வலுவிலுள்ள செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின்மீறுகை ஒன்றுள்ளது என நம்புவதறக் வங்கி எத்தன்மையதுமான காரணம் எதனையும் கொண்டிருக்கும்பட்சத்தில் அட்டை வைத்திருப்பவருக்கு (களுக்கு) அறிவித்தலின்றி வங்கி அதன் சொந்த விருப்பத்தின்பேரில் அட்டையை (அட்டைகளை) இல்லாதொழிக்கலாம்.

## 15. நியதிகள் வேறுபடுதல்

15.1 இதன்கண் அடங்கியுள்ள நியதி நிபந்தனைகளை மாற்றுவதற்கான அல்லது அட்டைக் கணக்குக் கூற்றில் அல்லது அதில் உள்ளடக்கப்பட்ட விளக்கவுரை அல்லது அத்தகைய மாற்றத்ததை/திருத்தத்தை அல்லது சேர்தலைப்பற்றி இலங்கையில் வெளியிடப்படும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செய்தித் தாள்களில் வெளியீடு என்ற வகையில் அறிவித்தலின்

மூலம் இதன்கண் அடங்கியுள்ள நியதி நிபந்தனைகளை அத்தகைய மாற்றம்/திருத்தம் அல்லது சேர்த்தல் பயனுறுவதற்குமுன்னர் (கட்டணங்களையும் இதன்கீழ் விதிக்கப்பட்ட அறவீடுகளையும் மீளாய்வு செய்தல், புதிய கட்டணங்களயும் அறவீடுகளையும் அறிமுகம் செய்தல் என்பன உட்பட ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல்) காலத்துக்குக் காலம் புதிய நியதி நிபந்தனைகளை அறிமுகம் செய்வற்கான உரிமை வங்கிக்கு இருத்தல்வேண்டும். மேலே கூறப்பட்டவாறு ஏதேனும் முறையில் அல்லது எல்லா முறைகளிலும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு அது பயனுறுத்தப்படவுள்ள திகதியின்பின்னர் அட்டையைப் பயன்படுத்துவதன்மீது மாற்றத்தை நிபந்தனை எதுவுமின்றி அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். அட்டை வைத்திருப்பவர் அத்தகைய மாற்றத்தை/திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிடில் அத்தகைய மாற்றம்/திருத்தம் பயனுறும் திகதிக்குமுன்னர் இல்லாதொழிக்கப்படுவதற்கென அட்டையை(அட்டைகளை) ஏதேனும் மேலதிக அட்டை/ துணை அட்டையுடன் சேர்த்து வங்கிக்கு திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

15.2 அட்டை வைத்திருப்பவர் அவரது அட்டையின்மீதும் எவையேனும் மேலதிக அட்டையின்(அட்டைகளின்)மீதுமான கொடுக்கல் வாங்கல்களுக்கெதிராக ஏதேனும் நட்டம், உரிமைகோரல், செயற்பாடுகள், வழக்கு நடைமுறைகள், கேள்விகள், பாதிப்புகள், கிரயங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுக்கு (இந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டமை எவ்வாறிருப்பினும்) வங்கிக்கு நட்டோத்தரவாதம் செய்தல் வேண்டும்.

## 16. தகவலை வெளிவிடுதல்

16.1 அட்டை வைத்திருப்பவரை அல்லது மேலதிக அட்டை வைத்திருப்பவரை(களைப்) பற்றிய அல்லது அவரது அட்டைக் கணக்கு(கள்) பற்றிய தகவலை வங்கியால் குறித்தொதுக்கப்பட்ட எவரேனும் மூன்றாம் திறத்தவருக்கு, அரசாங்க அமைப்புகளுக்கு அத்துடன்/அல்லது தோதானதென வங்கி கருதுகின்றவாறு ஒழுங்குபடுத்துநர்களுக்கு வெளிவிடுவதற்கு அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். அட்டை வைத்திருப்பவர் வங்கியுடன் அட்டையை (அட்டைகளை) இனிமேலும் வைத்திராதபோதிலும்கூட இந்தச் சம்மதம் பயனுறுதியுடையதாக இருத்தல்வேண்டும்.

16.2 அட்டை வைத்திருப்பவரின் அட்டை மற்றும் அட்டை கணக்குடன் தொடர்புடைய பதிவேடுகளை இலங்கை கடன் தகவல் பணியகத்திற்கு அத்துடன்/அல்லது வேறு ஏதேனும் உள்ளுர் அல்லது சர்வதேச கடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கைடுவதற்கு வங்கி

உரித்துடையதாகும் என்பதற்கு அட்டை வைத்திருப்பவா் இத்தால் சம்மதமளிப்பதுடன் ஒப்புறுதியும் செய்கின்றாா்.

**17. எதிரீடுசெய்யும் உரிமை**

எதிரீடு செய்வற்கான ஏதேனும் பொது உரிமைக்கு அல்லது சட்டத்தால் அல்லது வேறு ஏதேனும் உடன்படிக்கையின்கீழ், கடிதம் அல்லது வேறு ஒரு ஆவணத்தின் மூலம் உரித்தாக்கப்பட்ட வேறு உரிமைகளுக்கு மேலதிகமாக வங்கியானது அறிவித்தலின்றி அட்டைக் கணக்கின் அல்லது மேலதிக அட்டைக் கணக்கின் (கணக்குகள்) (கணக்குகளின்) மீது நிலுவையிலுள்ள மீதியை அட்டை வைத்திருப்பவா் அத்துடன்/அல்லது மேலதிக அட்டை வைத்திருப்பவா்(கள்) வங்கியுடன் பேணும் வேறு ஏதேனும் கணக்குடன்(கணக்குகளுடன்) இணைக்கலாம் அல்லது ஒன்றுதிரட்டலாம் என்பதுடன் அத்தகைய வேறு கணக்கில்(கணக்குகளில்) வரவிலிருக்கும் ஏதேனும் பணத்தை அட்டை வைத்திருப்பவரின் இந்த உடன்படிக்கையின்கீழ் வங்கியின் மட்டில் அட்டை வைத்திருப்பவரின் பொறுப்பில் அல்லது அதனைத் திருப்திப்படுத்துதல் தொடா்பாக எதிரீடு செய்யலாம் அல்லது கைமாற்றலாம்.

**18. செலான் காா்ட் REWARDS நிகழ்ச்சித்திட்டம்**

18.1 REWARDS புள்ளிகளை ஈட்டுதல்

(a) செலான் காா்ட் REWARDS என்பது REWARDS புள்ளிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய அளவீட்டு கூறாகும்.

(b) வங்கியினால் வழங்கப்படும Visa Platinum, Visa Signature, World Mastercard மற்றும் Visa Infinite Cards செலான் காா்ட் REWARDS நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு தகுதிபெறும். இதில் தனிப்பட்ட மற்றும் நிறுவன அட்டைகள் ஆகிய இரண்டும் உள்ளடங்கும்.

(c) உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் மற்றும் ஒன்லைன் மூலமாக கடன் அட்டை ஏற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் ஸ்தானத்தில் கொள்வனவுகளுக்காகக் Visa Platinum அட்டை வைத்திருப்பவாகள் கடன் அட்டையைப் பயன்படுத்தும்போது செலவு செய்யும் ஒவ்வொரு ரூ.300/க்கும் ஒரு புள்ளியையும் Visa Signature, World Mastercard மற்றும் Visa Infinite வைத்திருப்பவர்கள் ஒவ்வொரு ரூ.100/க்கும் ஒரு புள்ளியையும சம்பாதிப்பா். Rewards புள்ளிகள் வழங்கப்படுவது ரு. 1000/ கடந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமேயாகும். ரூ.1000/ குறைந்த கொடுக்கல்வாங்கல்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(d) ரொக்க முற்பணம் தொடர்பிலும் சூதாட்டம், நாணயக் கொள்வனவு, மீதி மாற்றம், பணத் தவணைமுறை திட்டத்தின் கீழான மீளப்பெறுதல் தொகை, வருடாந்தக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள், நிதி அறவீடுகள் மற்றும் ஏனைய அறவீடுகள், இடுகையிடப்படாத மற்றும் இரத்துச் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட ஆனால் அவை மட்டுமல்ல, குவாஸி கொடுக்கல் வாங்கல்கள் (quasi cash transactions)தொடர்பிலும் அட்டை வைத்திருப்பவர் Rewards புள்ளிகளைச் சம்பாதிக்க முடியாது.

(e) செலான் அட்டை ரிவோட்ஸ் திட்டத்தை மாற்றுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. இந்த மாற்றம் இடம்பெற்றதும், அதுபற்றி அட்டை வைத்திருப்பவர்களுக்கு மின்னஞ்சல், விபரக்கூற்றுத் தகவல், விபரக்கூற்றில் அல்லது விபரக்கூற்றுக் கடித உறையில் ஒட்டப்படும் செய்தி (ஸ்டிக்கர்), குறுஞ்செய்தி சேவைகள் அல்லது அச்சு ஊடகத்தின் வாயிலான விளம்பரம், www.seylan.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ பொது வலைத்தளம் மூலம் அறிவிக்கப்படும்.

(f) ரிவோட்ஸ் புள்ளிகளை பிரதான அட்டை, மேலதிக அட்டை ஆகிய இரு வகை அட்டைகள் தொடர்பாகவும் திரட்ட முடியும். அவ்வாறு கிடைக்கும் மொத்தப் புள்ளிகளையும் மீட்பதற்கு பிரதான அட்டை வைத்திருப்பவரும் மேலதிக அட்டை வைத்திருப்பவரும் தகுதி பெறுவார்கள்.

(g) அட்டை வைத்திருப்பவர் தவணைத் திட்டம் அல்லது 0% தவணைத் திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும் எவையேனும் கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில், Rewards புள்ளிகள் வழங்கப்படுவது திட்ட காலப்பகுதியில் மாதாந்த தவணைக்காக மட்டுமே என்பதுடன், மொத்தக் கொடுக்கல் வாங்கல் பெறுமதிக்கும் ஒரேயடியாக அல்ல.

(h) 2023 மே மாதம் 02ஆந் திகதி முதல் செய்யப்பட்ட POS கொடுக்கல்வாங்கல்களுக்காக Rewards புள்ளிகள் வழங்கப்படும்.

18.2 செலான் கார்ட் Rewards புள்ளிகளை மீட்டுக்கொள்ளுதல்

(i) அட்டை வைத்திருப்பவர்கள் கீழே தரப்பட்டுள்ள விருப்பத்தேர்வுகளுள் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி திரண்ட புள்ளிகளை மீட்டுக்கொள்ளலாம்:

- செலான் அட்டை ரிவோர்ட்ஸ் போர்ட்டல்களில் (Rewards portal) மீட்பதன் மூலம்
- செலான் அட்டை Rewards பங்காளி நிறுவனங்களில் மீட்பதன் மூலம்

(ii) Rewards பங்காளித்துவ நிறுவனங்களில் புள்ளிகள் வழங்கப்படுவது, முதன்மையாக மேற்கொள்ளப்படுவது தன்னியக்கமாக Rewards புள்ளிகள் வழங்கப்படுவதற்கு இடமளிக்கும் வகையில், வாடிக்கையாளரின் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசி

இலக்கத்தை வழங்குவதன் மூலமாகும். வழங்கப்பட்ட சுநறயசனள புள்ளிகளின் பணப் பெறுமதி அந்த பங்காளித்துவ நிறுவனத்தில் கொள்வனவு செய்த பொருளின் விலையில் இருந்து கழிக்கப்படும்.

(iii) அட்டை வைத்திருப்பவர் மீட்புக்கு வேண்டுகோள் விடுப்பதன் பேரில் Rewards புள்ளிகள் மீட்கப்பட்டதும் அவை அந்தந்த அட்டை வைத்திருப்பவரின் Rewards புள்ளிக்கான உரித்திலிருந்து அழிக்கப்படும்/நீக்கப்படும்.

(iv) மீட்புக்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டு செயன்முறைப்படுத்தப்பட்டதும் இரத்துச்செய்யப்படவோ மாற்றப்படவோ மாட்டாது.

(v) சம்பாதிக்கப்பட்ட Rewards புள்ளிகளைப் பணமாக மாற்றவோ அல்லது மீண்டும் அட்டையில் வரவு வைக்கவோ முடியாது.

(vi) குற்றமிழைக்காத அட்டை வைத்திருப்பவர்கள் மாத்திரமே Rewards புள்ளிகளை மாற்ற முடியும்.

(vii) கடன் அட்டை தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகையை ஈடுசெய்வதற்கு Rewards புள்ளிகளின் பெறுமதியைப் பயன்படுத்த முடியாது.

18.3 Rewards பங்காளி தாபனங்கள்

(a) சில Rewards பங்காளி தாபனங்கள் மீட்பு இடம்பெறும் முனையத்தில் மேலதிகப் பெறுமதியை அல்லது மேலதிக தள்ளுபடிகளை வழங்கத் தீர்மானிக்கலாம். மீட்பு செய்யப்படும்போது Rewards பங்காளித் தாபனம் எக் காரணத்தைக் கொண்டும் இந்த தள்ளுபடிகளை அல்லது மேலதிகப் பெறுமதியை வழங்க மறுப்பதற்கு வங்கி பொறுப்பாளியாக மாட்டாது.

(b) வங்கியானது, ஏதேனும் Rewards பங்காளித் தாபனத்தில் மீட்கப்படும் எவையேனும் உற்பத்திப் பொருள்களின் அல்லது சேவைகளின் வழங்குநர் அல்ல என்பதால் அவற்றிற்கான எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

(c) வங்கியானது, அதன் தற்றுணிபின் பேரில் வேறேதும் loyalty/rewards/mileage நிகழ்சித்திட்டத்துடன் இணைவதற்கு அல்லது அதிலிருந்து விலகுவதற்கு உரிமையைக் கொண்டுள்ளது.

18.4 Rewards பற்றிய விசாரணை

(a) ஆரம்ப மீதி, ஈட்டப்பட்ட புள்ளிகள், சீராக்கப்பட்ட புள்ளிகள், மீட்கப்பட்ட புள்ளிகள், புள்ளிகளின் மீதி, காலாவதியாவதற்குள்ள புள்ளிகள் என்பன செலான் Rewardsகளின்

பொழிப்பு என்பதன் கீழ் அட்டை வைத்திருப்பவரின் (காலப்பகுதிக்கான) கணக்கு விபரக்கூற்றில் காட்டப்படும்.

18.5 Rewards களின் காலாவதி

(a) ஒரு குறிப்பிட்ட ஆண்டில் சம்பாதிக்கப்பட்ட Rewards புள்ளிகள், மூன்று வருடங்களின் பின்னர் மூன்றாவது வருடத்தின் பின், டிசம்பர் 31ஆந் திகதி காலாவதியாகிவிடும்.

(b) மீளளிக்கும் புள்ளிகள் மீளளிக்கும் திகதியிலிருந்து 30நாட்களுக்குப் பின்னர் காலாவதியாகும்.

(c) காலாவதியாகவிருந்து மீட்கப்படாத புள்ளிகள் அனைத்தும், Rewards புள்ளிகள் காலாவதியான பின்னா் அட்டை வைத்திருப்பவருக்குக் கிடைக்காது.

18.6 செலான் அட்டை Rewards க்கு ஏற்புடைய பொது விதிமுறைகள்

(a) Rewards புள்ளிகளின் சம்பாதிப்பு மற்றும் ஒன்றுதிரட்டல் அல்லது மீட்புக் கட்டளைகள் தொடா்பாக ஏதேனும் மோசடி மற்றும்/அல்லது அது போன்ற முயற்சி இடம்பெறுமாயின், ஒன்றுசோ்ந்துள்ள Rewards புள்ளிகள் பறிமுதல் செய்யப்படுவதுடன், அட்டையானது வங்கியினால் வாபஸ் பெறப்படும் அல்லது இரத்துச் செய்யப்படும்.

(b) ஏதேனுமொரு கொடுக்கல் வாங்கல் சா்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டால் அல்லது ஏதேனும் காரணத்திற்காக மீள அறவிடப்பட்டால் அல்லது நோ்மாற்றம் செய்யப்பட்டால், அத்தகைய கொடுக்கல் வாங்கல் மூலம் பெறப்பட்ட Rewards புள்ளிகள் வங்கியினால் வாபஸ் பெறப்படும். ஏதேனுமொரு கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான Rewards புள்ளிகள் மீட்கப்பட்ட பின்னா், அக் கொடுக்கல் வாங்கல் சா்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டால் மற்றும்/அல்லது அதனை நோ்மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால், அத்தகைய சா்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல் தொடா்பில் மீட்கப்பட்ட சா்ச்சைக்குரிய Rewards புள்ளிகளின் ரூபாய் பெறுமதியை, அட்டை வைப்பாளரினால் வங்கியில் பேணப்படும் அட்டைக் கணக்கில் அல்லது வேறேதும் கணக்கில் இருந்து அறவிடுவதன் மூலம், மீட்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அத்தகைய சந்தா்ப்பங்களில், கோரிக்கை விடுக்கப்படும்போது, செலுத்தப்பட வேண்டிய பணத் தொகையை, விபரக்கூற்றில் காட்டப்பட்டுள்ள அடுத்த கொடுப்பனவுத் திகதிக்குள் செலுத்த அட்டை வைத்திருப்பவா் இணங்குகின்றாா்.

(c) அட்டை வைத்திருப்பவர் ஒருவர் எந்த நேரத்திலாவது தனது அட்டைக் கணக்கை சுயவிருப்பின் பேரில் முடிவுறுத்திக்கொண்டால் அல்லது அக் கணக்கு ஏதேனும் காரணத்திற்காக செலான் வங்கியினால் முடிவுறுத்தப்பட்டால், பிரதான அட்டை வைத்திருப்பவர் மற்றும் மேலதிக அட்டை வைத்திருப்பவர் ஆகிய இருவரும் செலான் கார்ட் Rewards திட்டத்தில் பங்குபற்றும் தகுதியை இழப்பார்கள். ஓர் அட்டைக் கணக்கு முடிவுறுத்தப்பட்டதும் பயன்படுத்தப்படாத எவையேனும் Rewards புள்ளிகள் தன்னியல்பாகவே இரத்துச்செய்யப்பட்டுவிடும் என்பதால், அட்டை வைத்திருப்பவர் அவற்றை மீட்க முடியாது. பயன்படுத்தப்படாத Rewards புள்ளிகளை அட்டை வைத்திருப்பவரின் மற்றுமொரு கணக்கிற்கு மாற்றவும் முடியாது.

(d) மேலதிக அட்டை வைத்திருக்கும் ஒருவரின் கணக்கு ஏதேனும் நேரத்தில் ஏதேனும் காரணத்திற்காக முடிவுறுத்தப்படும் பட்சத்தில், செலான் வங்கி வேறு விதமாகத் தீர்மானிக்காவிட்டால், பிரதான அட்டை வைத்திருப்பவர் தொடர்ந்தும் செலான் அட்டை Rewards திட்டத்தில் பங்குபற்றலாம்.

(e) Rewards பங்காளி நிறுவனங்களிலான ஏதேனும் மாற்றங்கள் உட்பட செலான் கார்ட் Rewards திட்டம் தொடர்பாக இச் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய மாற்றங்கள் யாவும், விபரக்கூற்றில் அச்சிடப்படும் குறிப்பு அல்லது அதனுடன் இணைக்கப்படும் பிரசுரம், வங்கியின் உத்தியோகபூர்வ பொது வலைத்தளம், SMS சேவை அல்லது பொருத்தமான வேறேதும் தொடர்பாடல் ஊடகத்தின் மூலம் அட்டை வைத்திருப்பவர்களுக்கு அறிவிக்கப்படும்.

(f) செலான் கார்ட் Rewards திட்டம் சம்பந்தமாக ஏதேனும் சர்ச்சை எழுமாயின், வங்கியின் தீர்மானமே இறுதியானதாகவும் முடிவானதாகவும் இருக்கும்.

(g) செலான் கார்ட் Rewards திட்டம் தொடர்பான விசேட வழங்கல்களைத் தொடர்பாடல் செய்வதற்காகக் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்ள அட்டை வைத்திருப்பவர்கள் இணங்குகின்றனர்.

(h) Rewards புள்ளிகளின் மீட்பு தொடர்பாக அட்டை வைத்திருப்பவரினால் அல்லது அவரின் சார்பில் தொலைபேசி, தொலைநகல், குறுந்தகவல் சேவை (“SMS”), தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (“PIB”) அல்லது மின்னஞ்சல் மூலம் ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்தல், கோரிக்கை அல்லது வேறேதும் தொடர்பாடல் (அறிவுறுத்தல்கள்”) வழங்கப்படுமாயின், அத்தகைய அறிவுறுத்தல்களை வழங்கியவரின் அல்லது வழங்கியதாகக் கூறப்படுபவரின் அதிகாரத்தை அல்லது அடையாளத்தை

விசாரிக்காமலும் அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நேரத்தில் நிலவிய சூழ்நிலைகளைக் கருத்திற்கொள்ளாமலும், அத்தகைய அறிவுறுத்தல்களில் நம்பிக்கை வைத்து அவற்றைச் செயற்படுத்த அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

(i) ஒரே அட்டை வைப்பாளருக்கு அல்லது வெவ்வேறு அட்டை வைப்பாளர்களுக்குச் சொந்தமான வெவ்வேறு கடன் அட்டைகளுக்கான Rewards புள்ளிகளை ஒருங்கிணைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

(j) வங்கியினால் நியமிக்கப்பட்ட மூன்றாந் தரப்புடன் செலான் அட்டை Rewards புள்ளிகளை கணிப்பிடுவதற்காக, கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய தரவுகளை களஞ்சியப்படுத்தி வைக்க அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

(k) அட்டை வைத்திருப்பவர் அடுத்தடுத்து இரண்டு (2) மாதங்களுக்கு குறைந்தபட்ச கொடுப்பனவைச் செலுத்தத் தவறினால், கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதி வரை சேர்ந்திருந்த Rewards புள்ளிகளை இரத்துச்செய்துவிட வங்கி உரிமை கொண்டுள்ளது.

(l) சம்பாதிக்கப்பட்ட, மீட்கப்பட்ட மற்றும் திரட்டப்பட்ட Rewards புள்ளிகள் தொடர்பாக எழும் ஏதேனும் சர்ச்சைகள் வங்கியினால் விசாரிக்கப்படுவதுடன், வங்கிக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் வேறு விதமாக நிரூபிக்கப்பட்டாலன்றி, அவற்றிற்கான பொறுப்பை அட்டை வைத்திருப்பவர் ஏற்க வேண்டும்.

(m) விசேட ஊக்குவிப்புத் திட்டங்களின் கீழ் அட்டை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் Rewards புள்ளிகள், அந்தந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ளபடி ஊக்குவிப்புத் திட்டத்தின் முடிவில் அட்டை வைத்திருப்பவருக்கு விநியோகிக்கப்படும்.

(n) இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் எவ்வாறிருந்தாலும், செலான் கார்ட் Rewards திட்டத்தில் பங்குபற்ற அட்டைக் கணக்குகளுக்கு உள்ள தகுதியைத் தீர்மானிப்பதற்கு செலான் வங்கி பூரண தற்றுணிபைக் கொண்டுள்ளது. செலான் Rewards திட்டத்தில் பங்குபற்றுவதிலிருந்து ஏதேனும் அட்டைக் கணக்கை மற்றும்/அல்லது அட்டை வைத்திருப்பவரை எவ்வித காரணமும் காட்டாமலே தகுதியிழக்கச் செய்யும் உரிமையும் வங்கிக்கு உண்டு.

(o) மீளளிக்கப்பட்ட செலான் கார்ட் Rewards புள்ளிகள் ஒரு முறை பயன்படுத்தப்பட்டதன் பின்னர், மீளப் பெற முடியாது.

## 19. தவணைமுறை மற்றும் மீதிப் பரிமாற்றத் திட்டங்கள்

செலான் தவணைத் திட்ட ஏற்பாடுகளான செலான் மீதி பரிமாற்றல் தவணைத் திட்டங்கள் (SBTIP), Flexi Plan, Relax Plan, Express Cash மற்றும் 0% தவணைத் திட்டங்கள் என்பன வெவ்வேறான விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் ஆளுகை செய்யப்படுகின்றன. அவை வங்கியின் இணையத்தளத்திலும் இத் திட்டங்களில் சேரும்போது அவருக்கு வழங்கப்படும் குறித்த விண்ணப்பத்திலும் (ஏதேனும் இருப்பின்) பிரசுரிக்கப்படும். அட்டை வைத்திருப்பவர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை, குறித்த தவணைத் திட்டத்தை பெற்றுக்கொள்ளும் வேளையில் சரியாக வாசித்து விளங்கிக்கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## 20. காப்புறுதித் திட்டம்

20.1 அட்டை வைத்திருப்பவர் நாடு திரும்பும் பயணச் சீட்டின் முழு விலையையும் அட்டைக் கணக்கிறகு (ஒரு குறிப்பான காலப்பகுதிக்கு) அல்லது அட்டை வைத்திருப்பவரால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அட்டையின் வகைக்கு ஏற்ப அறவிடுவாராயின் வங்கியால் பெறப்பட்ட காப்புறுதிப் பத்திரத்தின் நியதி நிபந்தனைகளுக்கிணங்க ஏற்புடைத்தாகுமிடத்து அட்டை வைத்திருப்பவர் பிரயாணக் காப்புறுதிக்கும் காப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இக்காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் உரிமைக்கோரிக்கைகளின் கொடுப்பனவுக்கு காப்புறுதிக் கம்பனி.்.கூட்டுததாபனம் தனியே பொறுப்புடையதாதல்வேண்டும் என்பதனையும் நட்ட ஈட்டிற்கோ உரிமைக்கோரிக்கைகளை முறைவழிப்படுத்துவதற்கோ வேறு வகையிலோ அல்லது எத்தன்மையதான ஏதேனும் முறையிலோ வங்கி பொறுப்பாளியாக்கப்படுதலாகாது என்பதனையும் அட்டை வைத்திருப்பவர் ஒப்புறுதி செய்கின்றார். வங்கி அட்டை வைத்திருப்பவருக்கு (வைத்திருப்பவர்களுக்கு) அறிவித்ததன் பின்னர் ஏதேனும் நேரத்தில் இக்காப்புறுதிப்பத்திரத்தையும் அதன் அனுகூலங்களையும் மீளப்பெறலாம்.

20.2 எந்தக் காப்புறுதி அனுகூலங்களைப் பெறுவதற்கு வங்கியால் வசதி செய்து தரப்படுகின்றதோ அந்தக் காப்புறுதி அனுகூலங்கள் அனைத்தும் அந்தந்த காப்புறுதிக் கம்பனியால் அல்லது கூட்டுத்தாபனத்தினால் பிரயோகிக்கப்படும் நியதி நிபந்தனைகளுக்கு அமைவானவையாதல் வேண்டும்.

20.3 ஏதேனும் தவறுகை அல்லது கொடுப்பனவு செய்யப்படாமையின் அல்லது காப்புறுதிக் கம்பனியின்/கூட்டுத்தாபனத்தின் சேவைகளுக்கு அல்லது அவை தொடர்பில் கொடுப்பனவு செய்யப்படாமையின் அல்லது ஏதேனும் கடப்பாட்டின் மீறுகையின் விளைவாக எந்த விதத்திலாயினும் எழக்கூடிய ஏதேனும் தன்மையினவாக உரிமைக்கோரிக்கைகளுக்கு அட்டை வைத்திருப்பவர் மட்டில் ஏதேனும் விதத்தில் வங்கி பொறுப்புடையதாதலாகாது.

20.4 அட்டைகள் மீதான காப்புறுதிக் காப்பீடு ஏதேனும் காரணத்திற்காக அட்டைக் கணக்கு மூடப்படுவதன்மீது அத்துடன் அட்டைக் கணக்கு வங்கியால் இரத்துச்செய்யப்படும்போதும்/ முடிவுறுத்தப்படும்போதும்/ தடைசெய்யப்படும்போதும் முடிவுறுதல் வேண்டும்.

## 21. அட்டை வைத்திருப்பவர் தகவல்களின் சேகரிப்பு, செயற்படுத்தல், பகிர்ந்துகொள்ளல்

### 21.1 சேகரிப்பு

செலான் பேங்க் பீஎல்சியும் செலான் பேங்க் பீஎல்சியின் ஏனைய மூன்றாந் தரப்பு பிரதிநிதிகளால் அட்டை வைத்திருப்பவா் தகவல்களை (அட்டை வைத்திருப்பவர், அட்டை வைத்திருப்பவரின் கொடுக்கல் வாங்கல்கள், அட்டை வைத்திருப்பவா் பயன்படுத்தும் செலான் வங்கி வசதிகள் மற்றும் சேவைகள், அட்டை வைத்திருப்பவா் செலான் வங்கியுடன் கொண்டுள்ள உறவுகள் பற்றிய பொருத்தமான தகவல்களும் உள்ளடங்கும்) சேகரிக்க, பயன்படுத்த மற்றும் பகிர்ந்துகொள்ள முடியும். அட்டை வைத்திருப்பவர் தகவல்கள் சம்பந்தப்பட்ட அட்டை வைத்திருப்பவரிடமிருந்து (அல்லது அவரின் சார்பில் செயற்படும் ஒருவரிடமிருந்து) கோரப்படலாம். அல்லது இத் தகவல்கள் செலான் வங்கியினால் அல்லது செலான் வங்கியின் சார்பில் அல்லது எவரேனும் செலான் வங்கி அங்கத்தவா்களினால் வேறு இடங்களிலிருந்து (பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்களும் உட்படும்) செலான் வங்கிக்கு அல்லது செலான் வங்கியின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குக் கிடைக்கும் தகவல்களிலிருந்து உருவாக்கப்படலாம் அல்லது இணைத்துக்கொள்ளப்படலாம்.

### 21.2 செயற்படுத்தல்

செலான் பேங்க் பீஎல்சியினால் பின்வரும் நோக்கங்கள் தொடா்பில் அட்டை உரிமையாளா் தகவல்களை செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்: (அ) அட்டை வைத்திருப்பவரினால் கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சேவைகளை வழங்குவதற்காக (ஆ) பணிந்தொழுகுதல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக. (இ) நிதிசாா் குற்ற இடா் முகாமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக. (ஈ) அட்டை வைத்திருப்பவரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஏதேனும் தொகைகளைச் சேகரிப்பதற்காக. (உ) கடன் தகுதியைப் பரிசோதித்து, கடன் சிபாரிசைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக. (ஊ) செலான் பேங்க் பீஎல்சி உரிமைகளை அமுல் செய்வதற்காக அல்லது பாதுகாப்பதற்காக. (எ) செலான் பேங்க் பீஎல்சியின் உள்ளகச் செயற்பாட்டுத் தேவைகளுக்காக (கடன் மற்றும் இடா் முகாமை, அமைப்பு அல்லது திட்டம் ஒன்றின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிா்வாக நோக்கங்களும் உள்ளடங்கும்). (ஏ) அட்டை உரிமையாளருடன் செலான் பேங்க் பீஎல்சி உறவுகளைப் பேணுவதற்காக (சந்தைப்படுத்தல் அல்லது நிதிச்

சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது அட்டை வைத்திருப்பவருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு போன்றவை) (“நோக்கங்கள்”).

## 21.3 அட்டை வைத்திருப்பவரின் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளல்

செலான் பேங்க் பீஎல்சி (அதன் நோக்கங்களுக்கு அவசியமெனவும் பொருத்தமெனவும் கருதும்) அட்டை வைத்திருப்பவர் தகவல்களை பின்வரும் பெறுநர்களுக்கு (அவர்களும் தமது நோக்கங்களுக்காக அத் தகவல்களைச் செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்) அனுப்பவும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதை அட்டை உரிமையாளர் இச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்கிறார்.

எவரேனும் உப ஒப்பந்தகாரர்கள், முகவர்கள், சேவை வழங்குநர்கள் அல்லது பிரதிநிதிகள் (குறித்த தரப்பினர்களின் ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் உட்பட)

சேவைகள் தொடர்பில் ஒரு உரிமையை பெற்றுக்கொள்ளும் அல்லது இடர் நிலைமையை பொறுப்பேற்கும் ஏதேனும் ஒரு தரப்பு,

கடன் சிபாரிசுகளைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக வேறு நிதி நிறுவனங்கள், கடன் சிபாரிசு நிலையங்கள் அல்லது கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கணக்காய்வாளர்கள்/வரி ஆலோசகர்கள்.

அட்டை உரிமையாளருக்கு சொத்து முகாமைத்துவ சேவைகளை வழங்கும் ஏதேனும் ஒரு மூன்றாந் தரப்பு நிதி முகாமையாளர்,

செலான் பேங்க் பீஎல்சியினால் அறிமுகப்படுத்தல்கள் அல்லது சிபாரிசுகள் வழங்கப்படும் அறிமுகப்படுத்தும் எவரேனும் தரகர்,
செலான் பேங்க் பீஎல்சி வர்த்தக மாற்றல், கைதுறப்பு, இணைப்பு அல்லது கையகப்படுத்தல் தொடர்பில்,
சேவைகளை வழங்கும் அதிகாரப் பிரதேசங்கள் மற்றும் சம அளவிலான பாதுகாப்பை வழங்கும் தரவுப் பாதுகாப்பு சட்டங்கள் இல்லாத அதிகாரப் பிரதேசங்களில் அமைந்திருந்தாலும் அவையும் உட்பட.

## 22. வாடிக்கையாளர் கடப்பாடுகள்

(i) செலான் வங்கி பிஎல்சிக்கு அவ்வப்போது வழங்கப்பட்ட அட்டை வைத்திருப்பவர் தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், உடனடியாகவும், ஏதேனும் நிகழ்விலும், முப்பது (30) நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக செலான் பேங்க் பிஎல்சிக்குத்

தெரிவிக்கவும், எந்தவொரு கோரிக்கைக்கும் பதிலளிக்கவும் அட்டை வைத்திருப்பவர் ஒப்புக்கொள்கிறார். செலான் வங்கி பிஎல்சிக்கு வழங்கிய தகவல் (தனிப்பட்ட தரவு அல்லது வரித் தகவல் உட்பட) இணைக்கப்பட்ட ஒவ்வொரு நபரும்/நபர்களும் இந்த விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர்களின் தகவல்களை செயலாக்குதல், வெளிப்படுத்துதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் குறித்து அறிவிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதாக அட்டை வைத்திருப்பவர் உறுதிப்படுத்துகிறார். இணைக்கப்பட்ட நபர்கள்/அத்தகைய நபர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட தரவை அணுகுவதற்கும் திருத்துவதற்கும் அவர்களுக்கு உரிமைகள் இருக்கலாம் என்று அட்டை வைத்திருப்பவர் அறிவுறுத்துவார்.

பின்வரும் சந்தா்ப்பங்களில்:

செலான் பேங்க் பீஎல்சி நியாயமான முறையில் கோரும் அட்டை வைத்திருப்பவா் தகவல்களை வழங்க ஒரு அட்டை வைத்திருப்பவர் தவறினால், அல்லது குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அட்டை வைத்திருப்பவா் தகவல்களைச் செயற்படுத்த, பரிமாற்றம் செய்ய அல்லது வெளிப்படுத்த செலான் பேங்க் பீஎல்சிக்கு தேவைப்படும் ஏதேனும் சம்மதத்தை அட்டை வைத்திருப்பவா் இடைநிறுத்தினால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது நிதிசாா் குற்றம் இழைக்கப்படும் சாத்தியம் உள்ளதென செலான் பேங்க் பீஎல்சி சந்தேகித்தால் அல்லது ஒரு அட்டை வைத்திருப்பவரினால் செலான் பேங்க் பீஎல்சிக்கு ஒரு நிதிசாா் குற்ற இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில்,

செலான் பேங்க் பீஎல்சி ஆனது:
அட்டை வைத்திருப்பவருக்குப் புதிய சேவையை வழங்க அல்லது தற்போதய சேவைகளில் அனைத்தையும் அல்லது அதிலொரு பகுதியைத் தொடா்ந்து வழங்க முடியாதிருக்கும் என்பதோடு, அட்டை வைத்திருப்பவருடன் தனது வியாபார உறவுகளை முடிவுறுத்தும் உரிமையும் அதற்கு உள்ளதுடன், கடப்பாடுகளின் அனுசரிப்பை உறுதிப்படுத்த செலான் பேங்க் பீஎல்சி அவசியமான நடவடிக்கைகளை எடுக்க மற்றும்/அல்லது அட்டை வைத்திருப்பவரின் கணக்கை (கணக்குகளை) தடைசெய்ய, இடம்மாற்ற அல்லது மூடிவிட நடவடிக்கை எடுக்கலாம்.

## 23. தரவுகளின் பாதுகாப்பு

தரவுப் பாதுகாப்பு சட்டத்திற்கு அமைவாக உள்நாட்டு நியாயாதிக்கத்தில் செயற்படுத்தப்பட்டாலும் வெளிநாட்டில் செயற்படுத்தப்பட்டாலும், செலான் பேங்க் பீஎல்சியின் அனைத்து உறுப்பினர்களும் அவற்றின் ஊழியா்கள் மற்றும் மூன்றாம் தரப்பினா் கடைப்பிடிக்க

வேண்டிய கண்டிப்பான இரகசிய குறியீடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் அட்டை வைத்திருப்பவர் தகவல்கள் பாதுகாக்கப்படும்.

## 24. நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகள்

நிதிசார் குற்றங்களின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் தடுப்பு தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள். தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், செலான் பேங்க் பீஎல்சியின் உள்ளகக் கொள்கைகளும் நடைமுறைகளும், மற்றும்/அல்லது ஏதேனும் அதிகார சபைகளின் கோரிக்கைகள் என்பவற்றிற்குப் பணிந்தொழுகுவதற்காக செலான் பேங்க் பீஎல்சி பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை (அவற்றின் தனி மற்றும் பூரண சுயதீர்மானத்திற்கேற்ப) எடுக்க வேண்டும் என்பதுடன் எடுக்கவும் முடியும் ("நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்").

நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகளை செலான் பேங்க் பீஎல்சி மேற்கொள்வதால் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதல் அல்லது கிளியரிங் செய்யப்படுதல், அட்டை வைத்திருப்பவரின் அறிவுறுத்தல்கள் அல்லது சேவைகளுக்கான விண்ணப்பங்கள் செயற்படுத்தப்படுதல் அல்லது அல்லது சேவைகளின் முழுமையான அல்லது பகுதியான வழங்கல் என்பன அபூர்வமான சந்தர்ப்பங்களில் செலான் பேங்க் பீஎல்சியினால் தாமதிக்கப்படலாம், தடைசெய்யப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் அட்டை வைத்திருப்பவருக்கு அல்லது மூன்றாம் தரப்பிற்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏதேனும் இழப்பு ஏற்படுமாயின், அது தொடர்பில், சட்டம் அனுமதிக்கு அளவிற்கு, செலான் வங்கி அட்டை வைத்திருப்பவருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு பொறுப்பாளியாகத் தேவையில்லை.

ஏற்புடைய பிரமாணங்கள் மற்றும் காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் வங்கியின் கொள்கைகளுக்கு அமைவாக, வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அட்டைகளைப் பயன்படுத்தி வேர்ச்சுவல் நாணயங்கள் (virtual currencies), கிரிப்டோ நாணயங்கள் (cripto currencies) மற்றும் பிற்கொயின்களை (bitcoins) கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் மற்றும்/அல்லது பயன்படுத்துதல், வெளிநாட்டு நாணயமாற்று வர்த்தகம், மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கடல்கடந்த பணப் பரிமாற்றங்களில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது.

**25. இந்த ஒப்பந்தத்தின் பயன் விளைவு**

25.1 இந்த ஒப்பந்தம் முடிவடைந்த போதிலும், இதில் உள்ள அனைத்து ஏற்பாடுகளும் அட்டை வைத்திருப்பவர் மற்றும் எந்தவொரு மேலதிக/துணை அட்டை வைத்திருப்பவருக்கும் எதிராக அட்டை வைத்திருப்பவர் மற்றும் எந்த மேலதிக/துணை அட்டைவைத்திருப்பவர் (கள்) தொடர்பான இதன் கீழ் ஏற்படும் எந்தவொரு /அனைத்து பொறுப்புக்கள் தொடர்பிலும் முழுமையான பயன் விளைவை கொண்டிருக்கும்.

25.2 இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒவ்வொன்றும் பிரிக்கக்கூடியதாகவும், ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகவும் இருக்கும், எந்த நேரத்திலும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் செல்லுபடியற்றதாகவோ, சட்டவிரோதமாகவோ அல்லது செயற்படுத்த முடியாததாகவோ இருந்தால், மீதமுள்ள விதிகளின் செல்லுபடியாகும், சட்டப்பூர்வ அல்லது நடைமுறைப்படுத்தப்படுதல் தகுதி எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது.

**26. ஏற்புடைய சட்டம், பிணக்குத் தீர்வு மற்றும் நியாயாதிக்கம்**

26.1 இந்த ஒப்பந்தம் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும்.

26.2 இந்த அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தம் அல்லது அதன் பொருள் அல்லது உருவாக்கம் தொடர்பான எந்தவொரு தகராறு மற்றும்/அல்லது கோரிக்கைகள் உட்பட ஆனால் அவை மட்டும் அன்றி பற்றுக்கள் மற்றும்/அல்லது கோரிக்கைகள் மற்றும்/அல்லது உரிமைகள் மற்றும்/அல்லது நடவடிக்கைக்கான காரணங்கள் மற்றும்/அல்லது வழக்குகள் மற்றும்/அல்லது விவகாரங்கள் மற்றும்/அல்லது சிக்கல்கள் மற்றும்/அல்லது பொறுப்புகள் தொடர்பில் செலான் வங்கி பிஎல்சியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள செலான் வங்கி பிஎல்சி, செலான் டவர்ஸ், இல. 90, காலி வீதி, கொழும்பு 3 அதிகார வரம்பிற்குள் உள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படும் மற்றும்/அல்லது தீர்மானிக்கப்படும்:

பின்வரும் சநதர்ப்பங்களில்:

- வங்கியினால் நியாயமான முறையில் கோரும் வாடிக்கையாளர் தகவல்களை வழங்க ஒரு அட்டை வைத்திருப்பவர் தவறினால், அல்லது,
- குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்களைச் செயற்படுத்த, பரிமாற்றம் செய்ய அல்லது வெளிப்படுத்த வங்கிக்கு தேவைப்படும் ஏதேனும் சம்மதத்தை அட்டை வைத்திருப்பவர் இடைநிறுத்தினால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது,
- நிதிசார் குற்றம் இழைக்கப்படும் சாத்தியம் உள்ளதென வங்கி சந்தேகித்தால் அல்லது ஒரு அட்டை வைத்திருப்பவரினால் வங்கிக்கு நிதிசார் குற்ற இடருக்கான வாய்ப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில்,

வங்கியானது:

a) அட்டை வைத்திருப்பருக்குப் புதிய சேவையை வழங்க அல்லது தற்போதய சேவைகளில் அனைத்தையும் அல்லது அதிலொரு பகுதியைத் தொடர்ந்து வழங்க முடியாதிருக்கும் என்பதுடன், அட்டை வைத்திருப்பவருடன் தனது ஒப்பந்த உறவுகளை முடிவுறுத்தும் உரிமையும் அதற்கு உண்டு.

b) கடப்பாடுகளின் அனுசரிப்பை உறுதிப்படுத்த அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும், மற்றும்/அல்லது

c) கிரடிட் கார்ட் கணக்கை (கணக்குகளை) தடைசெய்ய, மாற்ற அல்லது மூடிவிட நடவடிக்கை எடுக்கும்.

26.3 நிதிசார் குற்றங்களின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் தடுப்பு தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள். தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், வங்கியின் உள்ளகக் கொள்கைகளும் நடைமுறைகளும், மற்றும்/அல்லது ஏதேனும் அதிகார சபைகளின் கோரிக்கைகள் என்பவற்றிற்குப் பணிந்தொழுகுவதற்காக வங்கியும் அதன் அங்கத்தவர்களும் பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை (அவற்றின் தனி மற்றும் பூரண சுயதீர்மானத்திற்கேற்ப) எடுக்க வேண்டும் என்பதுடன் எடுக்கவும் முடியும் (“நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகள்”).

26.4 அத்தகைய நடவடிக்கைகளுள் (அ) அட்டை உரிமையாளரினால் அல்லது அவரின் சார்பில் அனுப்பப்படும் அல்லது பெறப்படும் ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், திரும்பப் பெறும் வேண்டுகோள், சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது ஏதேனும் கொடுப்பனவைப் பரிசோதித்தல், இடைமறித்தல் மற்றும் விசாரித்தல், (ஆ) நிதிகளின் மூலவிடம் அல்லது அவற்றின் உத்தேச பெறுநர்கள் பற்றி விசாரித்தல், (இ) அட்டை உரிமையாளர் தகவல்களை

வங்கியிடமிருக்கும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இணைத்தல், மற்றும்/அல்லது சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தின் மீது தடையுத்தரவு உள்ளதா என்பதை அறிவதற்காக அல்லது அட்டை உரிமையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்தை ஊர்ஜிதம் செய்வதற்காக மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

## 27. வரி இணக்கப்பாடு

27.1 வரிக் கடப்பாடுகள் எழுகின்ற சகல நியாயாதிக்கப் பிரதேசங்களிலும் வங்கியினால் வழங்கப்படும் கணக்கின் அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பிலும் உங்கள் வரிக் கடப்பாடுகளை புரிந்துகொள்வதும் அவற்றிற்கு இணங்கி நடப்பதும் முழுக்க முழுக்க உங்கள் பொறுப்பாகும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் (வரிகளைச் செலுத்துதல், வருமான வரிப் படிவங்கள் மற்றும் பொருத்தமான வரிகள் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை நிரப்புதல் என்பனவும் இக் கடப்பாடுகளில் உள்ளடங்கும்). ஒவ்வொரு இணைக்கப்பட்ட நபரும், ஓர் இணைக்கப்பட்ட நபர் என்ற முறையில் (அவரது தனிப்பட்ட முறையில் அல்ல) தனது விடயத்தில் இதே ஒப்புதலை வழங்க வேண்டும். இணைக்கப்பட்ட நபரின் அல்லது உங்களின் வாழிட நாடு, வசிப்பிடம், பிராஜாவுரிமை அல்லது கூட்டிணைப்பு என்பவற்றைக் கருத்திற்கெடுக்காத, பிரதேச வரையறையற்ற வரிச் சட்டங்களைச் சில நாடுகள் கொண்டிருக்கலாம். நாமோ அல்லது வங்கி வரி ஆலோசனைகளை வழங்குவதில்லை. நீங்கள் சுயாதீன தரப்பினரிடமிருந்து சட்ட மற்றும் வரி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு நியாயாதிக்கப் பிரதேசத்திலாவது ஏற்படக்கூடிய அட்டை வைத்திருப்பவர்களின் வரிக் கடப்பாடுகள் தொடர்பாக வங்கிக்கு எவ்வித பொறுப்பும் கிடையாது. குறிப்பாக, வங்கியினால் வழங்கப்படும் அட்டை கணக்கின் அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்படுகின்ற கடப்பாடுகளும் இவற்றில் அடங்கும்.

## 28. நானாவித விடயங்கள்

28.1 இந்த விதிகளுக்கும் ஏதேனும் வேறு சேவை, வங்கி வசதி வியாபார உறவு, கணக்கு அல்லது அட்டை வைத்திருப்பவருக்கும் செலான் பேங்க் பீஎல்சிக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பான விதிகளுக்குமிடையே கருத்து வேறுபாடு அல்லது முரண்பாடு காணப்படுமாயின், இந்த விதிகளே பொருத்தமானதாக மேலாதிக்கம் செலுத்தும். அட்டை வைத்திருப்பவர் தகவல்கள் தொடர்பில் அட்டை வைத்திருப்பவரிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட ஏதேனும் சம்மதங்கள், அதிகாரமளிப்புக்கள், செலான் பேங்க் பீஎல்சியினால் கோரப்பட்ட விலக்களிப்புக்கள் மற்றும் அனுமதிகள் யாவும், பொருத்தமான உள்நாட்டுச் சட்டம் அனுமதிக்கும் அளவிற்கு பூரணமாக நடைமுறையிலிருக்கும்.

28.2 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏற்பாடுகள் முழுவதும் அல்லது அவற்றில் ஏதேனுமொரு பகுதி ஏதேனுதொரு நியாயாதிக்கப் பிரதேசத்தின் சட்டத்தின் பிரகாரம் சட்ட விரோதமானதாக, செல்லுபடியற்றதாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாததாக இருப்பின், வேறேதும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அத்தகைய ஏற்பாடுகளினதும் அதே நியாயாதிக்கப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள விதிகளினதும் சட்டவலு, செல்லுபடியாகும் தன்மை அல்லது நடைமுறைப்படுத்தும் தன்மையும் எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது.

## 29. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை

அட்டை வைத்திருப்பவரினால் இந்த அட்டை ஒப்பந்தம் முடிவுறுத்தப்பாட்டாலும் மற்றும் /அல்லது அட்டை அல்லது அட்டை வைத்திருப்பவரின் கணக்கு மூடப்பட்டாலும் செலான் பேங்க் பீஎல்சியினால் அட்டை ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டாலும் செலான் பேங்க் பீஎல்சி இன் பிரதிநிதிகளால் (ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் அல்லது பணிப்பாளர்கள் உள்ளிட்டோர்) வழங்கப்படும் ஏதேனும் சேவைகள் வழங்கப்படுவது முடிவுறுத்தப்பட்டாலும், அல்லது அட்டை மற்றும் /அல்லது அட்டை வைத்திருப்பவரின் கணக்கு முடிவுறுத்தப்பட்டாலும், அத்தகைய முடிவுறுத்துகையைப் பொருட்படுத்தாமல், இந்த விதிகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.